# ழ

# 12- ஆம் வகுப்பு – தமிழ்.

## தொகுப்பு:தமிழினிராமகிருஷ்ணன்.

## அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

### இயல் - 1 பலவுள்தெரிக .

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம்
ஈ) நன்னூல்

2 ) "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்,
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது.
அ) கமட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
இ) ங மட்டும்சரி *ஈ) க, ங இரண்டும் சரி*

3) "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இல்லாத தமிழ்" இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்.
அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
*இ) அடி எதுகை, சீர்மோனை* ஈ) சீர்எதுகை, அடிமோனை

4) கருத்து 1 : இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் பயனிலை என்று வருவதே மரபு .
கருத்து 2 : தொடரமைப்பு சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
*இ) இரண்டு கருத்தும் சரி* ஈ) கருத்து 1சரி,2 தவறு



Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

5) பொருத்துக

அ) தமிழ் அழகியல் - 1) பரசு சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப் பூ - 2) தி.சு .நடராசன்
இ) கிடை - 3) சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ)உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ***ஈ) 2,3,4,1***

## இயல் - 2 / பலவுள்தெரிக .

1.பொருத்துக.

அ) குரங்குகள் - கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - மரங்களிலிருந்து விழுந்தன
இ) பறவைகள் - குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - மேய்ச்சலை மறந்தன (பதில் ; 3,1,2,4)

2.நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரியஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
*இ) மழைத் துளிகள்* ஈ) நீர்நிலைகள்

3.வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் *ஆ) மணல் அள்ளுதல்*
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

4.*பொய்யா வானம்* புதுப்பெயல் பொழிந்தென தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு.

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் *ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்*

5.உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் இத்தொடர் உணர்த்துவது

*அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது*

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

## இயல் - 3 / <u>பலவுள்தெரிக .</u>

1) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை.......................
அ) அறவோர், துறவோர் <u>*ஆ) திருமணமும் குடும்பமும்*</u>
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சிங்கமும்

2) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
அ) உரிமைத் தாகம் - 1. பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி - 2 . பூமணி
இ) ஜலாலுத்தீன்ரூமி - 3 . பக்தவச்சலபாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி <u>( பதில் : 2,4,1,3 )</u>

3) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன்ரூமி குறிப்பிடுவது.
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை <u>*ஈ) இவை அனைத்தும்*</u>

4) “ உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார் ” - யார் யார் ?
அ) சடாயு , இராமன் ஆ) இராமன் , குகன்
<u>*இ) இராமன், சுக்ரீவன்*</u> ஈ) இராமன் , சவரி

5) “எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே” - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது.

அ) தனிக் குடும்ப முறை <u>*ஆ) விரிந்த குடும்ப முறை*</u>
இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூக முறை

## இயல் - 4 / பலவுள்தெரிக .

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" இத்தொடரில் - கலன் உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக் கருவி ***இ) இசைக்கருவி*** ஈ) வேளாண் கருவி

2. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ***ஆ) காவியம்*** இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

3. "விண் வேறு விண்வெளியில் இயங்குகின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள்:
அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
***ஈ) விண் விண்வெளியில் உள்ள வெண்மதி செங்கதிர் முகில் அனைத்தும் வேறு வேறு***

4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு **இ) கடுக்காய்** ஈ) மாவிலைக்கரி
5. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ***ஆ) கணிதம்*** இ) புவியியல் ஈ) வேளாண்மை

## இயல் - 5 / பலவுள்தெரிக .

1. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் -காரணம் -
அ) நேரடி,மறைமுக வேலை வாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள் ,வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ***ஈ) அ,ஆ,இ- அனைத்தும்***
2.கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.
அ) கூற்று சரி, காரணம்தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு **ஈ) கூற்று சரி , காரணம் சரி**
3. பொருத்துக

அ) திருவல்லிக்கேணிஆறு - மாவலிபுரச் செலவு

ஆ) பக்கிங்காம் கால்வாய் - கல்கோடரி

இ) பல்லாவரம் - அருங்காட்சியகம் ஈ) எழும்பூர்- கூவம் (பதில் ;4,1,2,3)

4.'உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவார்' - இத் தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு

ஈ) இவை அனைத்தும்

5.'விளரிய ஞமலி' இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

## இயல் - 6 பலவுள் தெரிக.

1)ஆர்ப்பரிக்கும் கடல்/அதன் அடித்தளம்/ மௌனம்; மகா மௌனம்- அடிகள் புலப்படுத்துவது

அ) இரைச்சல் ஆ) குறை குடம் கூத்தாடும் இ ) நிறை குடம் நீர்த் தழும்பல் இல்

ஈ ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

2)ஏழாண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கடல் மன்னர்க்குக் காட்டல் தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1.மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

2.ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ ) 1 தவறு 2 தவறு *ஈ)1 சரி 2 சரி*

3)பொருத்துக

அ) ஆமந்திரிகை -1) பட்டத்து யானை ஆ) அரசுஉவா -2) மூங்கில்

இ) கழஞ்சு 3) இடக்கை வாத்தியம் ஈ) கழை -4) எடை அளவு (பதில் 3,1,4,2)

4)வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ)அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு

இ) நடுக் காட்சித் துணிப்பு *ஈ) காட்சிமறைவு*

## இயல் 7/ பலவுள் தெரிக

1) 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்; விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் *ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர் கிழார்* இ) கணைக்கால்இரும்பொறையை, கபிலர்
ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

2) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இருந்த நிலத்தை *ஈ) அனைத்தையும்*

3)முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1: கதை வடிவிலான வடிவமுடையது
கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ )கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1,2 தவறு ஈ) கூற்று 1 தவறு ,கூற்று 2 சரி

4) உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்- இத்தொடரில் பெயரெச்சம்
அ ) உண்டு ஆ) பிறந்து *இ) வளர்ந்த* ஈ) இடந்தனில்

5) யானை புக்க புலம் போல- இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்.
அ) தனக்குப் பயன்படும் ,பிறருக்குப் பயன்படாது
*ஆ)தனக்கும் பயன்படாது , பிறருக்கும் பயன்படாது*
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும் .

## இயல் - 8 / பலவுள்தெரிக .

1)சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் *இ) திண்டிவனம்* ஈ ) தருமபுரி

2) பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.
*அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு .வரதராசனார்*
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி வேங்கடசாமி
இ )தமிழ்த் தென்றல் - 3. திரு .வி .க

ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப் பாவாணர்

3)ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை. சீனி வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் *ஈ) கிறித்தவமும் தமிழும்*

4)நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

அ) தமது வீட்டு முகவரியை *ஆ) தமது குடும்பத்தை*

இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

5) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் *ஆ) நல்லியக்கோடனும் குமணனும்*

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்.

**திருக்குறள்.**

1.கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல்ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

2.அல்லல் படுப்பதூஉம் இல்- எவரோடு பழகினால்?

அ) வாள் போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்

இ) எண்ணியாங்கு எய்துபவர் *ஈ) தீயினத்தார்*

3.பொருத்துக.

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1.சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2.ஞானம் மானப் பெரிது

இ) சினம் - 3. தெய்வத்துள் வைக்கப் படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4. நன்மை கடலின் பெரிது (3,4,1,2)

4.திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையார் *ஆ) மன உறுதி உடையவர்*

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

 தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

**5.ஆராய்ந்து சொல்கிறவர்**

**அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் *<u>இ) தூதுவர்</u>* ஈ) உறவினர்**

**6.பொருத்துக**

**அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வார்**

**ஆ) செத்தார் - 2) சீரழிக்கும் சூது**

**இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்**

**ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்**

**அ) 1,2,3,4 ஆ) 2,3,4,1 இ) 4,1,3,2 *<u>ஈ) 4,3,2,1</u>***

**7.நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்**

***<u>அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்</u>***

**ஆ) மனத்திட்பம் உடையவர் இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்**

**ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்**

**8.எளியது, அரியது என்பன**

**அ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை**

***<u>ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது</u>***

**இ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு**

**ஈ) மெய்ப்பொருள் காண்பது- உருவுகண்டு எள்ளாதது.**

**9.வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - எதற்கு?**

**<u>அ)செய்யாமல் செய்த உதவி</u> ஆ) பயன்தூக்கார் செய்த உதவி**

**இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி**

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் - 1

**<u>1.பிழையான தொடரைக் கண்டறிக.</u>**

**அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.**

**ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.**

***<u>இ) காலையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.</u>***

**ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.**

2) பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
*அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.*
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் - 2

1.தமிழில் திணைப் பாகுபாடு ---------- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
*அ) பொருட்குறிப்பு* ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க் குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு

2. “ உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே / அஃறிணை என்மனார் அவரல பிறவே”- இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ----------------------
அ) நன்னூல் ஆ) அகத்தியம் *இ)தொல்காப்பியம்* ஈ) இலக்கண விளக்கம்

3.யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே
அ) அஃறிணை , உயர்திணை *ஆ) உயர்திணை , அஃறிணை*
இ) விரவுத்திணை , அஃறிணை ஈ) விரவுத்திணை , உயர்திணை

4.பொருத்தி விடை தேர்க

| | | |
|---|---|---|
| அ) அவன் அவள் அவர் | - | உளப்படுத்தாத் தன்மைப் பன்மை |
| ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் | - | உளப்பாட்டுத் தன்மைப் பன்மை |
| இ) நாம் முயற்சி செய்வோம் | - | தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ) நாங்கள், நாம் | - | பதிலிடு பெயர்கள் |

அ) 4,1,2,3 ஆ) 2,3,4,1 இ) 3,4,1,2 ஈ) 4,3,1,2

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் – 3

1.பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ.தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ.தேவையற்ற இடங்களில் இடைவெளிவிட்டு எழுதுதல்.

இ.நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.

ஈ.வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல் .

2.வல்லினம் மிகும் மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக

அ) பாலை பாடினான் - 1.தேரைஎன்னும் உயிரினத்தைப் பார்த்தான்

ஆ) பாலைப் பாடினான் - 2.தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் - 4.பாலைத்திணை பாடினான் ( பதில்: 4,3,1,2)

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் – 4

1.வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்?
பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.
அ) அன்பே ____________ (ஆர்வமாய் / *தகளியாய்)*
ஆ) வான்மழை ____________ (தூறலில் / *பொழிந்திடின்)*
இ) கண்ணிரண்டும் ____________ (இலாதார் / *இல்லார்)*
ஈ) வெண்ணிலவு ____________ (காய்கிறது / *ஒளிர்கிறது)*
உ) வெய்யோன் ____________ *(காய்ந்திட* / ஒளிர்ந்திட)
1.பொருத்துக.

அ) மாச்சீர் – 1) கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் – 4) தேமா, புளிமா

அ) 1, 2,4,3 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3, 4, 2,1 4.

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் – 5

1.படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் *இ) காட்சி* ஈ) ஒலி

2.'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில்------------------பயின்று வந்துள்ளது.

அ)பயன்படிமம்ஆ) வினைப்படிமம் இ)மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

3.கூற்று: உவமை, உருவகம் போலப் படிமமும் வினை பயன்மெய் உரு ஆகியவற்றின் அடிப்படையில்தோன்றும்.

காரணம்: எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

4.மெய்ப் படிமத்துக்கு உரிய பாடலைத் தேர்வு செய்க.

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு.......

ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது......

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்......

ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப.......

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் – 6

1.ஐம்பெருங் காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டார்

அ)சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ)இளம்பூரணர்

2.கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு +இயம் எனப்பிரிந்து மரபைக் காப்பது இயம்புவது,வெளிப்படுத்துவது , மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி

அ)கூற்று 1 சரி , கூற்று 2 தவறு ஆ)கூற்று 2 சரி , கூற்று 1 தவறு

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

3.சரியானவற்றைப் பொருத்தித்தேர்க:

அ) காதை - 1) கந்த புராணம் ஆ) சருக்கம் - 2 ) சீவகசிந்தாமணி



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

இ) இலம்பகம் - 3) சூளாமணி ஈ) படலம் - 4) சிலப்பதிகாரம் ( பதில் 4,3, 2,1 )

4.தவறான இணையைத் தேர்க.

| பாவகை | இலக்கியம் |
|---|---|

*அ) விருத்தப்பா - நாலடியார்* ஆ) ஆசிரியப்பா - அகநானூறு

இ) கலிவெண்பா - தூது ஈ) குறள்வெண்பா - திருக்குறள்

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் – 7

1) பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ *ஆ) வயதில் சிறியவள் ஆனாலும்தலைவி* !

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தா போறான் தருமன்

2) தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.

அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது

இ) நம்பமுடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது

3)'சாப விமோசனம்', 'அகலிகை'கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு . அழகிரிசாமி *ஆ) புதுமைப்பித்தன்*

இ) ஜெயமோகன் ஈ) எஸ் . ராமகிருஷ்ணன்

4.பண்புக் குறியீடுகளைத் கதைமாந்தர்களோடு பொருத்துக

அ) அறம் -1) கர்ணன் ஆ) வலிமை -2) மனுநீதிச் சோழன்

இ) நீதி -3) பீமன் ஈ) வள்ளல் -4) தருமன்

அ) 3 ,2 ,1, 4 ஆ) 4,3,2,1 இ) 2,4,3,1 ஈ) 4,3,1,2



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

## இலக்கணத் தேர்ச்சிகொள்... இயல் – 8

1) குறியீடுகளைப் பொருத்துக

அ) பெண் - 1) சமாதானம் ஆ) புறா - 2) வீரம்

இ) தராசு - 3) விளக்கு ஈ) சிங்கம் - 4) நீதி <u>(பதில் 3, 1, 4, 2)</u>

2) கூற்று : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

காரணம்: பொதலேர், ரைம்போ, வேர்லேன்,மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.

அ)கூற்று சரி, காரணம் தவறு <u>*ஆ) கூற்று சரி, காரணம் சரி*</u>

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு , காரணம் சரி

3.சங்க இலக்கியத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளை குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்

அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி <u>*ஈ) உள்ளுறை உவமை*</u>

4.'திட்டம்' என்னும் தலைப்பில் 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது.

அ) அமுத சுரபி ஆ) ஆதிரைப் பருக்கை <u>*இ) திட்டம்*</u> ஈ)பயனற்ற விளைவு

5.மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது

<u>*அ) குறியீடு*</u> ஆ ) படிமம் இ) அங்கதம் ஈ ) தொன்மம்



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

## கூடுதல் வினாக்கள்.

- *சிற்பி* ,பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்
- மொழிபெயர்ப்புக்காகவும், ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலுக் காகவும் இருமுறைசாகித்ய அகாதமி விருது பெற்றவர் *சிற்பி.*
- கவிதையின் இயங்காற்றல் தான் *நடை.*
- ஓசையும் பொருளும் இணைந்த கலை வடிவத்தை *ஒலிப் பின்னல்* என்கிறோம்.
- தொகை நிலையைப் பற்றி தொல்காப்பிய *எச்சவியல்* பேசுகிறது.
- காவிய தர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்*தண்டியலங்காரம்.*
- தண்டியலங்காரத்தின் ஆசிரியர் *தண்டி*
- தண்டியலங்காரம் *பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல்* என *மூன்று* பெரும்பிரிவுகளை உடையது.
- கடந்த 150 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டு 2009
- பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு 2005 டிசம்பர் 23.
- புவிவெப்பமடைதல், மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கலே என்று கூறிய இங்கிலாந்து அறிவியல் கருத்தாளர் *டேவிட் கிங்.*
- நெடுநெல்வாடை ஆசிரியர் *நக்கீரர்*
- நெடுநல்வாடை *188* அடிகளைக் கொண்டு, ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.
- நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன்*பாண்டியன் நெடுஞ்செழியன்.*
- திருமணம் , குடும்பம்ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் இடம் பெறவில்லை.
- குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் திருக்குறளில் தான் பயின்று வருகிறது.

- குடும்பு என்னும் சொல்லின் பொருள் கூடி வாழுதல்.
- தற்காலிகத் தங்கும் இடத்திற்குப்பெயர் புக்கில்
- திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் தனியாக வாழும் இடத்திற்குப் பெயர் தன்மனை.
- ‘மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே’ எனக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல் குறுந்தொகை.
- ஜலாலுத்தீன் ரூமியின் கவிதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் கோல்மன் பார்க்ஸ்.
- ஜலாலுத்தீன் ரூமியின் கவிதையைத் தமிழில் தாகம் கொண்ட மீன் என்றுமொழிபெயர்த்தவர் என். சத்தியமூர்த்தி.
- கம்பராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம்.
- கம்பரது காலம் 12 ஆம் நூற்றாண்டு.
- கணக்காயருக்குப் பெயர் உபாத்தியாயர்.
- பள்ளி என்னும் சொல் சைன மடங்களுக்கும் பாடசாலைக்கும் பொதுவானப் பெயர்.
- ‘மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்’ என்னும் பாடல் வரி இடம்பெறும் நூல் தமிழ்விடுதூது.
- ‘ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்’ எனக் கூறும் நூல் சிந்தாமணி.
- சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன் / சுரதா நடத்திய இதழ் காவியம்.
- இலக்கியம் , விண்மீன், ஊர்வலம் ,போன்ற இலக்கிய ஏடுகளை நடத்தியவர் சுரதா.
- நடை எனும் சிற்றிதழை நடத்தியவர் சி.மணி.
- எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே எனும் பாடல் வரி இடம்பெறும்நூல் புறநானூறு , பாடியவர் ஔவையார்.
- புறம், புறப்பாட்டு என அழைக்கப்படும் எட்டுத்தொகை நூல் புறநானூறு.
- இந்தியாவின் முதல் பொது நூலகம் கன்னிமாரா நூலகம்.


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

- 1856 இல் இந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் ராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
- அண்ணா நூற்றாண்டு நூலகம் 2010 ஆம் ஆண்டு கலைஞரால் தொடங்கப்பட்டது.
- ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகம் அண்ணா நூற்றாண்டு நூலகம்.
- திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டு உள்ளது.
- மனுமுறை கண்ட வாசகம் ,ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடை நூலை எழுதியவர் இராமலிங்க அடிகளார்.
- பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் பாடியவர் திருஞானசம்பந்தர்.
- திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.
- அகநானுறு மூன்று பிரிவுகளை உடையது.
- பாரத மக்களின் பரிதாப சிந்து - தேயிலைத் தோட்டப் பாட்டு.
- சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் எனப் பாடியவர் பாரதியார்.
- மயிலை .சீனி. வேங்கடசாமிக்குத் தமிழ்ப் பேரவைச் செம்மல் என்ற விருதை மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.
- மகேந்திர வர்மனின் மத்த விலாசம் என்ற நாடக நூலை வேங்கடசாமி மொழிபெயர்த்துள்ளார்.
- ஜான் பன்னியனின் பில்கிரிம்ஸ் புரோகிரஸ் எனும் ஆங்கில நூலைத் தழுவலாகக் கொண்டு இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது.
- எச்.ஏ கிருட்டிணனாரைக் கிறித்துவக் கம்பர் என்று போற்றுவர்.
- சிறுபாணாற்றுப் படையை இயற்றியவர் நல்லூர் நத்தத்தனார்.
- சிறுபாணாற்றுப்படை 269 அடிகளைக் கொண்டது.



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

| |
|---|
| இளந்தமிழே - சிற்பி |
| பிறகுகொருநாள் கோடை - அய்யப்ப மாதவன் |
| நெடுநல்வாடை - நக்கீரர் |
| கம்பராமாயணம் - கம்பர் |
| தெய்வமணிமாலை - இராமலிங்க அடிகள் |
| சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள் |
| இலக்கியத்தில் மேலாண்மை - இறையன்பு |
| இதில் வெற்றி பெற - சுரதா |
| அதிசய மலர்- தமிழ்நதி |
| முகம் - சுகந்தி சுப்பிரமணியன் |
| இரட்சணியயாத்திரிகம் - எச்.ஏ.கிருட்டிணனார் |
| தமிழ் மொழியின் நடை அழகியல் - தி .சு. நடராசன் |
| இடையீடு - மணி |
| உரிமைத்தாகம் - பூமணி |
| முதல்கல் - உத்தமச் சோழன்<br>தலைக் குளம் - தோப்பில்முகமது மீரான்<br>கோடை மழை - சாந்தா தத்<br>சங்க காலக் கல்வெட்டும் என் நினைவுகளும் - ஐராவதம் மகாதேவன்<br>நடிகர் திலகம் - பாலச்சந்திரன் சுள்ளிக்காடு |

***உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.***

1. தாமரை இலை நீர்: தாமரை இலை நீர் போல அவர்கள் இருவருக்கும் உள்ள உறவு இருந்தது.
2. கிணற்றுத் தவளை போல : அறிவை விரிவு செய்யாமல் கிணற்றுத் தவளையாக வாழக்கூடாது.
3. எலியும் பூனையும் போல: அவர்கள் இருவரும் கொள்கையில் எலியும் பூனையுமாக இருந்தார்கள்.
4. அச்சாணி இல்லாத தேர் போல : நல்ல தலைவன் இல்லாத நாடு அச்சாணி இல்லாத தேர் போலஅல்லல் படும்.



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

5. உள்ளங்கை நெல்லிக்கனி போல: உண்மை எப்பொழுதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல வெளிப்படையாகத் தெரியும்.

## தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

1.நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது

*நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.*

2.எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது .

*எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.*

3.ரங்கன் வெங்கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார்.

அரங்கன் வெண்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

4.மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

5.ஐப்பசி அடை மழையில் ஊருனி நிறைந்தது.

ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது.

6.இன்னிக்குச் சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

இன்று சாயுங்காலம் (மாலையில்) கபடி போட்டி நடைபெறும்.

## மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1.ஆறஅமர = இனியன் எந்தச் செயலையும் ஆற அமர செய்வான்.
2.ஆணி அடித்தார்போல = சமூகத்தைச் சீர்திருத்தும் செயல்களை ஆணி அடித்தாற்போல மக்களுக்குப் பதிய வைக்க வேண்டும்.
3.அகலக் கால் = எதுவும் தெரியாத செயல்களில் அகலக் கால் வைக்காதே.

4.வழிவழியாக =நம் முன்னோர்கள் கடைப்பிடித்த நற்பண்புகளை நாம் வழிவழியாகக் கடைபிடிபோம்.

5.கண்துடைப்பு= மக்களை ஏமாற்றுவதற்குக் கண்துடைப்பாகச் சில வாக்குறுதிகளை அரசியல்வாதிகள் அளிக்கின்றனர்.

## நிறுத்தக்குறிகள் இட்டு எழுதுக.

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன் செய்த வினை நிறைவேறும்காலம் என்றீர்களேஅவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

“இளங்கோ அடிகள், சாத்தனாரிடம் முன் செய்த வினை நிறைவேறும்காலம் என்றீர்களே!அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது ?அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக” எனக் கேட்டார்.

| படிப்போம் பயன்படுத்துவோம். |
|---|
| **Debit Card** – பற்று அட்டை |
| **Demand Draft** – கேட்பு வரைவோலை |
| **Withdrawal Slip** – திரும்பப் பெறல் படிவம் |
| **Teller** – விரைவுக் காசாளர் |
| **Mobile Banking** – அலைபேசி வழி வங்கி முறை |
| **Internet Banking** – இணையவங்கி முறை |
| **Artist** – கவின்கலைஞர் |
| **Cinematography** – ஒளிப்பதிவு |
| **Passport** - கடவுச்சீட்டு |
| **Animation** – இயங்குபடம் |
| **Sound Effect** – ஒலிவிளைவு |
| **Arrival** - வருகை |
| பிறமொழிச்சொல் / தமிழ்ச்சொல். |
| சர்க்கார் – அரசு / சம்பளம் - ஊதியம் / ஆத்மா - உயிர் / சக்தி - ஆற்றல் |
| அம்சம் - பிறப்பு / மனுஷன் - மனிதன் / மனுஷவர்க்கம் - மனித இனம் |
| பிரபஞ்சம் - உலகம் / மாயை - உலக ஆசை / ஸ்புடம் - சோதிப்பது. |
| தமிழாக்கம் தருக.<br>1)**Learning is a treasure that will follow its owner everywhere.**<br>கற்றல் என்பது மிகப் பெரிய செல்வம் ; அச்செல்வம் கற்பவரைத் தொடர்ந்து செல்லும். / கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. |
| **2) A new language is a new life.**<br>புதிய மொழி புதிய வாழ்க்கை. |
| **3) If you want people to understand you , speak their language.**<br>பிறர் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அவர் மொழியில் பேசு. |
| **4) knowledge of languages is the doorway to wisdom.**<br>மொழிகளின் அறிவு ஞானத்தின் வழித்தடம். |
| **5) the limits of my language are the limits of my world.**<br>என் மொழியின் எல்லை என் உலகத்தின் இல்லை. |

**பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையானத் தொடர்களாக ஆக்குக.**

**1.குமரன் வீடு பார்த்தேன்.** *குமரனை வீட்டில் பார்த்தேன்*

**2.மாறன் பேச்சு திறன் யார் வெல்ல முடியும்.**
*மாறனின் பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்.*

**3.போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுக்கள் குவிந்தன.** *போட்டியில் வெற்றி பெற்றதால் கலைச்செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.*

**4காலை எ(ழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.**
*காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.*

**5.அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.**

*அனைவரையும் அன்புடன் அழைத்தவனுக்குத் துன்பம் தர யாருக்கு மனம் வரும்.*

**6.சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.**
*சான்றோர்க்கு மதிப்பு கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.*

**வல்லினமெய்களை இட்டும் நீக்கியுமா எழுதுக.**

**1)என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீது தான்; அவர்கள் எல்லாபிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.**

*என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீது தான்; அவர்கள் எல்லாப் பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.*

**2)எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டுஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.**



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

*எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டுஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றித் துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.*

3) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

*நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.*

4)மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

*மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்பதுன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.*

5)ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் ,உண்மையானவற்றை தெரிந்து கொண்டு,அறியாமையை அகற்றி பல நல்லனவற்றை கற்றுகொடுக்கும்.

*ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையான வற்றைத் தெரிந்து கொண்டு,அறியாமையை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக்கொடுக்கும்.*

தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1.வாழைக் காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
*வாழைத்தோட்டத்தில் குயில்கள் கூவிக் கொண்டும் காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன.*

2)முருகன் சோறு சாப்பிட்டு பால் குடித்தான்.
*முருகன் சோறு உண்டு பால் பருகினான்.*

**3.கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.**
***கோவிந்தன் குடியிருக்க சுவர் வைத்துக் கூரை வேய்ந்தார்.***

**4.வனவிலங்கு காப்பகத்தில் சிங்ககுட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.**
***வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையையும் யானைக்கன்றையும் கண்டேன்.***

**5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.**

***ஆட்டுப் பட்டியைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.***

**6.பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.**
***பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.***

**பொருள் வேறுபாடு அறிந்து *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***

**1.எ.கா. களம், கலம்.**
**போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்குக் கலத்தில் நீர் தரப்பட்டது.**
**2.வலம், வளம். ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர் வளத்தால் செழித்திருந்தன.**

**3.புல், புள். புல்வெளிப் பகுதியில் புள்ளினங்கள் நிறைய இருந்தன.**

**4. உளை, உழை. இலக்கு அடையும் வரை மன உளைச்சல் இன்றி உழைப்போம்.**
**5.கான்,காண். கானகத்தில் கருங்குயிலைக் காண் என்றால் அம்மா.**

**6.ஊண்,ஊன் (ஊன் –இறைச்சி / மாமிசம் ,ஊண் –உணவு)ஊணில் ஊனைக் குறைப்போம்; உடலைக் காப்போம்.**

**7.தின்மை,திண்மை (திண்மை -உறுதி வலிமை ,தின்மை -தீமை)**
**தின்மையை அழிக்க திண்மை ஏற்போம்.**


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

8.விலை விளை விழை:
கார் பருவத்தில் நன்றாக விளைந்ததால் தானியங்களின் விலை குறையாமல் இருக்கஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.

9.தலை தளை தழை: அடிமைத்தளையிலிருந்து தலைவர்கள் நம்மை மீட்டதால் இன்று நாம் தழைத்திருக்கிறோம்.

10.அலை அளைஅழை : அளைக்கு அருகில் அலைந்துகொண்டிருந்த நண்பனை அழைத்தேன்.

11.கலை, களை ,கழை : மக்கள் கூட்டம் களைந்ததும் கலை இழந்தது கழைக் கூத்தாடுபவரின் முகம்.

## விடைக்கேற்ற வினா அமைத்தல்.

விடை: குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில் தான் இடம் பெற்றுள்ளது.
வினா : குடும்பம் என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

1.நடுவன் அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தைஅமைத்தது.
நடுவணரசு எந்த ஆண்டு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது?.
2.சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தைச் சீர்செய்யவும் பாதுகாப்பாகபயணிக்கவும் உதவுகின்றன.
சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் எவ்வாறு உதவுகின்றன?.
3.1856 இல்தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் ராயபுரத்தில் அமைக்கப்பட்டது?.
தென்னிந்தியாவில் முதல் தொடர் வண்டி நிலையம் எங்கு எப்போது அமைக்கப்பட்டது.
4. "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளிகளுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.
எதை ஆவணப்படம் என்று கிரியோர்சன் குறிப்பிடுகிறார்?

## சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.

- **பலகை** : பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.
  *பல கைகள் ஒன்றிணைந்தால் வெற்றி உறுதி*
- **தாமரை:** தாமரை நிறைந்த குளம் அழகாக இருக்கிறது.
  *தாவுகின்ற மானை(மரை)ப் பிடிக்க புலி ஓடியது.*
- **கோவில்:** கோவில் கொடியவர்களின் கூடாரமாக மாறி விடக்கூடாது.
  *அரசன் வாழ்ந்த இடம் கோவில் என்றழைக்கப்பட்டது.*

- **தலைமை:** கலைஞர் தலைமையில் கவிஞர்கள் கவிதை வாசித்தனர்.
  *தலையில் மை தடவுவது உடலுக்குக் கேடு.*
- **வெங்காயம்:** வெங்காயம் மருத்துவக் குணமுடைய உணவுப் பொருள்.
  *உடலில் வெம்காயம் ஏற்பட்டால் மருந்து இட வேண்டும்.*

## இலக்கிய நயம் பாராட்டுக.

முச்சங்கங் கூட்டி
முது புலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி.
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி !
-கண்ணதாசன்

முன்னுரை: சாகித்திய அகாதமிபரிசு பெற்ற கவியரசு கண்ணதாசன்புகழ்ப் பெற்ற தமிழ்ப் பாடல் ஆசிரியர் . தமிழக அரசின் அரசவைக்கவிஞராக இருந்துள்ளார். இவர் இயற்றிய கவிதையில் உள்ள நயங்களைப் பற்றி காண்போம்.

**திரண்ட கருத்து:**

முச்சங்கம் அமைத்து ,அச்சங்கத்தில் பெரும் புலவர்களைக் கூட்டி , அளப்பரிய பொருள் நயமுடைய கவிதைகளைப் படைத்து ,பல அற்புதங்களைச் செய்தவள் தமிழ் அன்னையாவாள்.

**மையக்கருத்து:**

தமிழ் மொழி காலத்திற்கு ஏற்ற கருத்துக்களைத் தனக்குள் வைத்திருக்கும் அற்புதமொழியாகும்.

- மோனை : பாடலில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
  முச்சங்கம் - முது புலவர் / அச்சங்கம்- அளப்பரிய
  சொற் சங்கம்- சுவைமிகுந்த

- எதுகை : பாடலில் முதல் எழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.
  முச்சங்க -அச்சங்க / சொற் சங்க - அற்புத

- இயைபு : பாடலின் கடைசி எழுத்தோ, அசையோ, சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு ஆகும்.
  தமைக் கூட்டி / பொருள் கூட்டி / கவி கூட்டி / பெருமாட்டி.

- சந்தம் - ஓசை.பாடலைப்படிப்பதற்கும் கேட்பதற்கும் இனிய ஓசை நயத்துடன் கவிஞர் இயற்றியுள்ளார்.

**2) இலக்கிய நயம் பாராட்டுக.**

வெட்டியடிக்குது மின்னல்- கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம்- கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா -என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய- மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா -பாரதியார்



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

- மோனை : பாடலில் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை
  சான்று: எட்டு- எங்கனம்
- எதுகை: பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.
  சான்று : வெட்டி -கொட்டி
- இயைபு :பாடலின் கடைசி எழுத்தோ அசையோ சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு
- முரண்: எதிர்ச்சொல். பாடல் சொல்லாலும் பொருளாலும் முரண்படுவது
  - சந்தம் : ஓசை . பாடலைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் இனிய ஓசை நயத்துடன் கவிஞர் இயற்றியுள்ளார்.

## பாடாண் திணை.

**வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

**திணை விளக்கம் :** பாடு +ஆண்+ திணை. ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற இயல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண்திணை ஆகும்.

சான்று : ‘வாயிலோயே வாயிலோயே’ எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

**திணைப் பொருத்தம்:** புலவர்களுக்கு வாயிலை அடைக்காத நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை, விரைந்து ஓடும் குதிரையை உடைய நெடுமான் அஞ்சியின் வலிமை, திறன், போன்ற சிறப்புகள் “வாயிலோயே எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில்“ இடம்பெறுவதால் இப்பாடல் பாடாண் திணைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

## அணி

**1) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக ?**

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல்நிறை அணி.

**அணி இலக்கணம் :** சொல்லையும் பொருளையும் வரிசையாக(நிரலாக ) நிறுத்தி, நேராகப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி ஆகும்.

**குறளின் பொருள் :** அன்பும் அறனும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.

**அணிப் பொருத்தம் :** இக்குறட்பாவில் முதலடியில் அன்பும் அறனும் என்ற சொற்கள் உள்ளன. அடுத்த அடியில் இச்சொற்களுக்கு இணையான பண்பும் பயனும் என்ற சொற்கள் அமைந்துள்ளன. இப்படி முறையாக இல்லறத்தின் அன்பே பண்பாகவும் அறனே பயனாகவும் முறைப்பட அமைந்துள்ளமையால் இது நிரல்நிறை அணி ஆகும்.

**2) கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.**

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**அணி இலக்கணம் :** தொடர்புடைய இரு பொருள்களுள், ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவம் செய்யாமல் விட்டு விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

**பொருள் :** சினம் தன்னைச் சார்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு .அஃது ஒருவரது சுற்றமென்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.



Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

அணிப் பொருத்தம் : சினத்தை நெருப்பாகவும், சுற்றத்தைப் பாதுகாப்புத் தெப்பமாகவும் உருவகப்படுத்திவிட்டு, சினப்படாமல் இருந்தால்தான் வாழ்க்கை என்னும் கடலைக் கடக்க முடியும் என்று , கடலை உருவகப் படுத்தாமல் விட்டு விட்டதால் ஏகதேச உருவக அணிக்குச் சான்றாக அமைந்துள்ளது.

3 )அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க/ இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் இக்குறட்பாவில்பயின்று வரும் அணியை விளக்குக.

அணி : இக்குறட்பாவில் தொழில் உவமையணி பயின்று வந்துள்ளது.

அணி இலக்கணம் : ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை, தொழில் உவமை எனப்படும்.

குறளின் பொருள் : தீக்காய்வார், அகலாது அணுகாது இருப்பது போல, அரசர்களைச் சார்ந்து இருப்பவர் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

அணிப் பொருத்தம்: அகலுதல் அணுகுதல் ஆகிய தொழில்கள் ஒப்புமை படுத்தப் பட்டுள்ளதால், இவ்வணி தொழில் உவமையணிக்குச் சான்றாக அமைந்துள்ளது.

4)எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கி கீழ்க் காணும் குறலுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

அணி இலக்கணம் : உவமை ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் அமைய போல, போன்ற முதலிய உவம உருபுகள் மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

குறள் விளக்கம் : உறங்கியவர், இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர் ; அதுபோல கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே ஆவர்.

அணிப் பொருத்தம் : உறங்கியவர்க்கும் இறந்தவருக்கும் வேறுபாடு தோன்றாது. அதுபோலவே கள்உண்பவருக்கும் நஞ்சு உண்பவர்க்கும் வேறுபாடு கிடையாது.

# இலக்கணக் குறிப்பு:

- **உரிச்சொற்றொடர்:** ஒரு சொல்லின் முன்பு மா, தட, சால, உறு,தவ, நனி,கூர், கழி போன்ற சொற்கள் வந்தால் அவை உரிச்சொற்றொடர். எடுத்துக்காட்டு: மாதவம் / மாமயிலை

- **தொழிற்பெயர் :** அல்/தல்/அம்/கை போன்ற விகுதியில்முடியும் சொற்கள்.

  எடுத்துக்காட்டு: சொல்லுதல், மறத்தல்-நகை, அழுகை , இளிவரல், மருட்கை, அச்சம் ,பெருமிதம், வெகுளி,

- **வினையாலணையும் பெயர்:** அன் ,அர்,ஓர் போன்ற விகுதியில் முடியும் உயர்ந்தோர் செற்றவர்,பாதகர்

- **பண்புத்தொகை;** வண்ணம் ,வடிவம், அளவு ,சுவை இவைகளில் வரும். ஒரு சொல்லைப் பிரித்தால் நிலைமொழி மையில் முடியும்.

  எடுத்துக்காட்டு: செம்பருதி -செந்தமிழ் –செந்நிறம்- வெங்கதிர் புதுப்பெயல் -கொடுங்கோல் –பெருங்கடல்- கருந்தடம் , வெங்குருதி நன்கலம்,தொல்நெறி

- **வினைத்தொகை :** மூன்று காலமும் மறைந்து வரும்/ இரண்டு சொற்களாக வரும் /முதல்சொல் வினைச்சொல்லாக இருக்கும் / அடுத்து வரும் சொல் பெயர்ச்சொல்லாக இருக்கும் / ஒற்று மிகாது.

  எடுத்துக்காட்டு: தாழ் கடல் - வயங்கு மொழி - காய்நெல்/வளர் தலம்

- **எண்ணும்மை:** இரண்டு மூன்று சொற்களாக வரும். இரண்டு மூன்று சொற்களும் உம் என்று முடியும். எடுத்துக்காட்டு : அறிவும் புகழும், அன்பும் அறமும் / ஆடலும் பாடலும்

 தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

- **அடுக்குத்தொடர் ;** இரண்டு சொல்லோ மூன்று சொல்லோ அடுக்கி வருவது அடுக்குத்தொடர் /இச்சொற்களைப் பிரித்தாலும் பொருள் தரும். முத்து முத்தாய், ஊன்ற ஊன்ற

- **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :** பொய்யா - அடையா-அறியா,மறவா

- **பெயரெச்சம் ;** ஒரு சொல்லின் ஈற்று எழுத்தைப் பிரித்துப் பார்த்தால் 'அ' வில் முடியும் . பெயரைக்கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம்.
  எடுத்துக்காட்டு : புக்க,சொற்ற ,திருந்திய

- **வினையெச்சம் ;** ஒரு சொல்லின் ஈற்று எழுத்தைப் பிரித்துப் பார்த்தால் 'இ, உ' வில் முடியும் . வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம்.
  எடுத்துக்காட்டு : சிவந்து ,கலங்கி,வெந்து ,சினந்து ,போந்து

- உருவகம் : வியர்வை வெள்ளம்
- இடைக்குறை : இலாத- உளது
- உவமைத்தொகை : மலரடி
- மரூஉ : நுந்தை. நும்தந்தை என்பதன் மரூஉ
- உலகு - இடவாகு பெயர்
- ஓர்மின் - ஏவல்பன்மை வினைமுற்று
- உன்னலிர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று
- இன்னிசை அளபெடை : படுப்பதூஉம்
- சொல்லிசை அளபெடை :வளைஇ –வெரீஇய, ஒரீஇ
- செய்யுளிசை அளபெடை-இசைநிறை அளபெடை : சிறாஅர்- உழாஅது

## புணர்ச்சி விதி

- **ஆங்கவற்றுள்=** ஆங்கு+ அவற்றுள்
  விதி: உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் ஆங்+க்+அவற்றுள்
  விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே -ஆங்கவற்றுள்
- **தனியாழி =** தனி + ஆழி
  விதி: இ ஈ ஐ வழி யவ்வும் தனி + ய் + ஆழி

விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - தனியாழி

- ஒருமையுடன் = ஒருமை + உடன்

  விதி: இ ஈ ஐ வழி யவ்வும். ஒருமை+ ய் +உடன்

  விதி: உடல்மேல்உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - ஒருமையுடன்.

- ஏழையென= ஏழை + என

  விதி: இ ஈ ஐ வழி யவ்வும். ஏழை+ ய்+என

  விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - ஏழையென.

- வெங்கதிர் =வெம்மை + கதிர்

  விதி: ஈறு போதல் - வெம்+ கதிர்

  விதி: முன் நின்ற மெய் திரிதல் - வெங்கதிர்

  - இனநிரை= இனம் + நிறை

    விதி: மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் - இனநிரை

  - புதுப்பெயல்= புதுமை + பெயல்

    விதி :ஈறு போதல் புது + பெயல்

    விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும் புதுப்பெயல்

- அருங்கானம் =அருமை + கானம்

  விதி : ஈறு போதல் - அரு+ கானம்

  விதி : இனமிகல் – அரு + ங் + கானம். அருங்கானம்

- பெருங்கடல் =பெருமை +கடல்

  விதி : ஈறு போதல் - பெரு+ கடல்

  விதி : இனமிகல் - பெருங்கடல்

- பெருந்தேர் - பெருமை + தேர்

  விதி : ஈறு போதல் - பெரு+ தேர்

  விதி : இனமிகல் -பெரு + ந் + தேர். பெருந்தேர்

- பூம்பாவாய் = பூ+ பாவாய். பூ+ம்+பாவாய்

  விதி : பூப்பெயர் முன் இன மென்மையும்தோன்றும் .



தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

- எத்திசை= எ+திசை
  விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்.

- தலைக்கோல் =தலை + கோல்
  விதி: இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும். தலைக்கோல்
- முன்னுடை = முன்+ உடை
  விதி: தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் முன்+ன் + உடை-
  விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே . முன்னுடை

- உள்ளொன்று =உள் + ஒன்று
  விதி: தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் - உள்+ள்+ ஒன்று.
  விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - உள்ளொன்று.
- செல்லிடத்து =செல் + இடத்து
  விதி : தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் . செல் + ல் + இடத்து.
  விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே . செல்லிடத்து .

## பகுபத உறுப்பிலக்கணம்.

### இளந்தமிழே.

சாய்ப்பான்= சாய்+ப்+ப்+ஆன். சாய் பகுதி, ப்- சந்தி ப்- எதிர்கால இடைநிலை, ஆன்- ஆண்பால் வினைமுற்று விகுதி

வியந்து = விய+த்(ந்)+த்+உ
விய-பகுதி, த் -சந்தி, ந்- ஆனது விகாரம், த்- இறந்த கால இடைநிலை , உ- வினையெச்ச விகுதி

விம்முகின்ற = விம்மு + கின்று +அ
விம்மு-பகுதி, கின்று - நிகழ்கால இடைநிலை, அ -பெயரெச்ச விகுதி.
இருந்தாய் = இரு +த்(ந்)+த்+ஆய்
இரு -பகுதி, த் -சந்தி, ந்- ஆனது விகாரம், த்- இறந்த கால இடைநிலை , ஆய் -முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

கண்டான் = காண் (கண் ) + ட்+ ஆன்

| |
|---|
| காண் - பகுதி, ட்- இறந்த கால இடைநிலை, ஆன்-ஆண்பால் வினைமுற்று விகுதி. |
| அமர்ந்தான் = அமர்+த்(ந்)+த்+ஆன். அமர்-பகுதி, த்-சந்தி,ந்-ஆனது விகாரம், த்- இறந்த கால இடைநிலை , ஆன்- ஆண்பால் வினைமுற்று விகுதி |
| செய்த= செய்+த்+அ. செய்- பகுதி, த் இறந்த கால இடைநிலை, அ- பெயயெச்ச விகுதி |
| சாற்றி = சாற்று + இ<br>சாற்று- பகுதி இ-வினையெச்ச விகுதி |
| பேசுவார் = பேசு+வ்+ ஆர். பேசு - பகுதி, வ் -எதிர்கால இடைநிலை, ஆர்- பலர்பால் வினைமுற்று விகுதி.<br><br>வைத்து= வை+த்+த்+உ.<br>வை - பகுதி, த் -சந்தி, த் -இறந்த கால இடைநிலை,<br>உ - வினையெச்ச விகுதி.<br><br>நினைக்கின்ற= நினை + க் + கின்று + அ<br>நினை - பகுதி, க் - சந்தி, கின்று -நிகழ்கால இடைநிலை, அ -பெயயெச்ச விகுதி<br><br>உயர்ந்தோர் =உயர்+த்(ந்)+த் +ஓர்<br>உயர்- பகுதி, த்- சந்தி, ந் - ஆனதுவிகாரம் ,த் - இறந்தகால இடைநிலை, ஓர்-பலர்பால் வினைமுற்று விகுதி<br><br>தந்தனன்= தா(த)+ த்(ந் )+ த் + அன்+அன். தா - பகுதி, த் - சந்தி,<br>ந் - ஆனதுவிகாரம் , த் - இறந்தகால இடைநிலை, அன் -சாரியை,<br>அன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி. |
| பொலிந்தான் = பொலி + த்(ந் )+ த் +ஆன் . பொலி - பகுதி , த் - சந்தி,<br>ந் ஆனது விகாரம், த் - இறந்தகாலஇடைநிலை ,<br>ஆன் - ஆண்பால்வினைமுற்று விகுதி |
| அறிந்து = அறி + த்(ந்)+ த் +உ<br>அறி - பகுதி, த் - சந்தி, ந் - ஆனது விகாரம், |

| |
|---|
| த் -இறந்த காலஇடைநிலை, உ - வினையெச்ச விகுதி |
| அறுத்து = அறு + த் + த் + உ<br>அறு பகுதி, த்-சந்தி, த்-இறந்த கால இடைநிலை,<br>உ- வினையெச்ச விகுதி |
| வந்து = வா(வ) +த் (ந்)+த் +உ<br>வா- பகுதி, த் - சந்தி, ந் - ஆனது விகாரம், த் - இறந்த கால இடைநிலை ,<br>உ- வினையெச்ச விகுதி |
| கலைந்து = கலை + த் (ந் )+ த் + உ<br>கலை - பகுதி, த் -சந்தி, ந் - ஆனது விகாரம், த் - இறந்த கால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி.<br><br>பகைத்த= பகை +த்+ த்+ அ<br>பகை - பகுதி, த் -சந்தி, த் - இறந்த கால இடைநிலை,<br>அ - பெயரெச்ச விகுதி.<br><br>பழித்தனர்<br>பழி+த்+த்+அன்+அர் = பழி - பகுதி, த் - சந்தி, த் - இறந்த கால இடைநிலை, அன் - சாரியை, அர் - பலர்பால் வினைமுற்று விகுதி<br><br>இடிந்து= இடி+த் (ந்)+த் +உ இடி - பகுதி, த் -சந்தி, ந்- ஆனது விகாரம்,<br>த்- இறந்த கால இடைநிலை , உ- வினையெச்ச விகுதி. |
| கலங்கி = கலங்கு +இ . கலங்கு - பகுதி , இ - வினையெச்ச விகுதி |
| ஈந்த =ஈ + த்(ந்) + த் +அ<br>ஈ-பகுதி, த்-சந்தி, ந்-ஆனது விகாரம், த்-இறந்த கால இடைநிலை,<br>அ-பெயரெச்ச விகுதி |
| அமர்ந்தனன் =அமர்+த்(ந்)+த்+அன்+அன்<br>அமர் - பகுதி , த் - சந்தி ,ந் -ஆனது விகாரம் த்- இறந்த கால இடைநிலை,<br>அன் - சாரியை , அன்- ஆண்பால்வினைமுற்று விகுதி |
| தாங்கிய=தாங்கு+இ(ன்)+ய்+அ |

| |
|---|
| தாங்கு-பகுதி, இ(ன்)-இடைநிலை,ய்-உடம்படுமெய்,அ பெயரெச்ச விகுதி |
| விளங்கி=விளங்கு +இ . விளங்கு - பகுதி , இ - வினையெச்ச விகுதி |
| வெகுளி =வெகுள்+இ . வெகுள் - பகுதி , இ- வினையெச்ச விகுதி |
| மருட்கை = மருள் +கை. மருள் -பகுதி, ள் ட் ஆனது விகாரம்,<br>கை-தொழிற்பெயர் விகுதி |
| நகை = நகு+ஐ. நகை - பகுதி , ஐ - தொழிற்பெயர் விகுதி |
| தொழுதனர் = தொழு+த்+அன்+அர்.<br>தொழு - பகுதி, த் - இறந்தகால இடைநிலை,<br>அன் - சாரியை , அர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி |

## நெடுவினா

1) ‘நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து’ என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

### பெரு மழைக் காலம்

சமரன்: வணக்கம் ஐயா! உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

பசுமை தாசர்: வணக்கம் . மிக்க நன்றி.

சமரன் : ஐயா! நீங்கள் நேற்று நெகிழி பற்றி கூட்டத்தில் உரையாடியது பயனுள்ளதாக இருந்தது.

பசுமை தாசர்: விழிப்புணர்வு மூலம் மக்களுக்கு நெகிழி பற்றிய பாதிப்புகளைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம்.

சமரன்: ஆமாம், அய்யா ! ஆனால் , மக்கள் இன்னும் முழுமையாக நெகிழியை விட்டுவிட இல்லை.

பசுமை தாசர்: மக்களுக்கு நெகிழியால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி கவலை இல்லை. இன்றைய நாள் மகிழ்ச்சியாகச் சென்றால் போதும், நாளைய

**தலைமுறை எப்படி இருந்தால் என்ன? என்று நினைக்கிறார்களோ? என்னவோ தெரியவில்லை.**

**<u>சமரன்:</u> ஐயா ! இன்று பள்ளிக்கூடம் ஒன்றிற்குச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பற்றி உரையாற்றச் சென்றிருந்தேன் .அப்பொழுது மாணவர்களுக்கு நெகிழி என்பது ஒரு திடப்பொருள், இதைப் பிளாஸ்டிக் என்று அழைப்பார்கள் .நெகிழி என்பது செல்லுலோஸ் என்ற பொருளால் ஆனது. 1862ல் லண்டனைச் சேர்ந்த அலெக்சாண்டர் பார்க்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. நெகிழியால் வரும் பயன்களை விட பாதிப்பே அதிகம். மாணவச் செல்வங்களே ! நீங்கள் நெகிழியைத் தவிர்த்து, நிலத்தை நிமிர்த்துங்கள் என்று உரையாடி விட்டு வந்தேன். மாணவர்கள் இனி நெகிழி பயன்படுத்த மாட்டோம் என்று உறுதி மொழி ஏற்றார்கள்,ஐயா.**

**<u>பசுமை தாசர் :</u> மிக்க நன்றி சமரன். நீங்கள் உரையாடியது என் உள்ளத்திற்கு உவப்பாக உள்ளது. ஒருமாதம் கழித்து நீங்கள் அந்தப் பள்ளிக்குச் சென்று உறுதிமொழி ஏற்ற மாணவர்கள் அதைச்சரியாகக் கடைபிடிக்கிறார்களா? என்பதைத் தெரிந்து , கடைபிடித்தால் அவர்களுக்கு வாழ்த்து சொல்லுங்கள் . கடைபிடிக்கவில்லை என்றால் அன்பாக அறிவுரை கூறுங்கள்.**

**<u>சமரன் :</u> சரி ஐயா, நெகிழியை நீக்கு! நிலத்தைப் பசுமையாக்கு!! என்ற தலைப்பில் எங்கள் கிராமத்தில் கருத்தரங்கம் ஒன்று நடைபெறுகிறது ஐயா, நீங்கள் வந்து மக்களுக்கு நெகிழியின் பாதிப்பைப்பற்றி பேசுங்கள் ஐயா.**

**<u>பசுமை தாசர் :</u> உறுதியாக வருகிறேன் சமரன். நெகிழியைத் தவிர்த்து மண்வளம் காப்போம்! மழைபெறுவோம்! மரம் செழிக்கட்டும் ! மனிதமும் செழிக்கட்டும்.**

**<u>சமரன் :</u> நன்றி ஐயா.**

**<u>2)நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.</u>**

**மேகமானது உலகமே குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது.**
**பெருமழையால் மனிதன் மற்றும் விலங்குகளின் இயல்பு வாழ்க்கை தடைபட்டது.**

- **கோவலர்கள் இருந்த தாழ்வானப் பகுதியில் வெள்ளம் பெருகியதால் வெறுப்படைந்தனர்.**

- தாங்கள் மேயவிட்டு இருந்த எருமை , பசு ,ஆடு ஆகிய நிரைகளை மேட்டு நிலங்களுக்கு மேயஓட்டிச் சென்றனர்.
- தாம் பழகிய நிலத்தை விட்டு வேறு இடத்துக்குச் சென்றதால் வருத்தமடைந்தனர்.
- மழையாலும் வாடைக்காற்றின் குளிர்ச்சியாலும் நடுங்கி இருந்த கோவலர்கள் உடலைக் கொள்ளி நெருப்பினால் சூடேற்றிக் கொண்டனர்.
- விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கின .பறவைகள் மரத்திலிருந்து நிலத்தில் விழுந்தன.
- பசுக்கள் பால் குடிக்க வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச்செய்யும் அளவிற்குக் குளிர்கால நள்ளிரவு இருந்தது. என்று மழைக்காலத்தை நெடுநல்வாடையில் வர்ணனையாக வடித்திருக்கிறார் நக்கீரர்.

**3)செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

- அறங்களில் சிறந்த அறம், செய்த நன்றியை மறவாமல் இருப்பது. எந்நன்றியை மறந்தாலும்,ஒருவர் செய்த நன்றியை ஒருபோதும் மறக்கக் கூடாது என்ற வாழ்வியல் தத்துவத்தைச் செய்ந்நன்றி அறிதல் என்ற அதிகாரத்தின் மூலம் நமக்கு அறிவுரை வழங்குகிறார் வள்ளுவர்.
- வையகம் வானகம் : செய்யாமல் செய்த உதவிக்கு இந்த மண்ணுலகையும் அந்த விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது.
  உலகை விட பெரியது : உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அது செய்யப்பட்ட காலத்தை நோக்கும்போது இவ்வுலகத்தை விட மிகப் பெரியதாகும்.
  கடலை விட பெரியது : எதையும் எதிர்பார்க்காமல் ஒருவர்செய்த உதவியின் அளவைச் சீர்தூக்கிப் பார்த்தால் அது கடலை விடப் பெரியது.
  தினை - பனை : ஒருவர் தினை அளவு உதவி செய்தாலும் அதன் பயனை அறிந்தவர் அதைப் பனை அளவாகக் கொள்வார்.

நினைப்பதும் மறப்பதும் : ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறக்கக்கூடாது. அவர் செய்த தீமையை மறந்து விட வேண்டும்.
எத்தகைய அறத்தை அழித்தவர்க்கும் அதிலிருந்து தப்பிக்க வழி உண்டு.
ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்குத் தப்பிக்க வழியே இல்லை.
அற வாழ்க்கை வாழ்வதே வாழ்வின் முழுமை.
ஒருவர் செய்த உதவியை மறவாமல் இருப்பதே சிறந்த அறமாகும் என்பதைச் செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்தின் மூலம் திருவள்ளுவர் நமக்கு வழிகாட்டுகிறார்.

4)சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் -இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

- முன்னுரை : கோபம் குடியைக் கெடுக்கும்.தன் குடியை மட்டும் அல்லாமல் தன்னைச் சேர்ந்த வரையும் அழிக்கும் ஆபத்தானது சினம் . சினம் விடுத்து பொறுமையைக் கடைபிடித்துப் பொறுப்புடன் வாழ முப்பால் நமக்கு வழிகாட்டுகிறது.
- தன்னைவிட மெலியவரிடத்தில்சினத்தைக் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர்.தன்னைவிட வலியவரிடத்தில் சினத்தைக் காத்தால் என்ன? காக்கா விட்டால் என்ன?.
- சினம் தீமையே தருவதால் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்துவிட வேண்டும்.
- முக மலர்ச்சியையும் அக மகிழ்ச்சியையும் கொல்லுகின்ற சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை.
- ஒருவர் தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால் சினத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நம்மையே சினம் அழித்துவிடும்.
- சினம் தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அஃது ஒருவரது சுற்றமென்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

- முடிவுரை : மனிதர்கள் தினம் தினம் தன் வாழ்நாளில் சினம் கொள்ளாமல் சிந்தித்துப் பொறுமையுடன் வாழ்ந்தால் போற்றுதலுக்குரிய வாழ்க்கையை வாழலாம்.

**5 )அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.**

முன்னுரை : அறிவுடைமை அதிகாரத்தில் உள்ள கருத்துக்கள் வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நிற்கும் என்பதை வள்ளுவர் வழிக் காண்போம்.

*அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்க லாகா அரண்.*

- அறிவு ஆபத்திலிருந்து காக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்புக் கோட்டையாகும்.
- மனத்தை அது போகும் போக்கிற்குச் செல்ல விடாமல் , தீமையில் இருந்து விலக்கி நல்ல வழியில்செலுத்துவது அறிவு ஆகும்.
- எந்த ஒரு பொருளைப் பற்றி யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைப்பொருளைக் காண்பதே அறிவாகும்.
- உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ அந்நிலையில் தானும் உலகத்தோடுஇணைந்து செல்வதே அறிவாகும்.
- பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் அறிவுடையோருக்கு, நடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

**6)கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

உரைநடையும் கவிதையும் வேறு வேறு. கவிதை எதுகை ,மோனை , இயைபு, முரண் , சந்தம் ,அணி முதலிய யாப்பிலக்கண நெறிகளுக்கு உட்பட்டு எழுதுவது.கவிதை எழுத அறிய வேண்டுவனவற்றை நமக்குக் கற்றுத் தருகிறார் சுரதா.

- சொல்லைச் சிறந்த முறையில் தேர்வு செய்து எதுகை, மோனை அமைத்துக் கவிதை எழுத வேண்டும்.

- அடி அளவு தெரிந்து யாப்பிற்குப் பொருந்தி வரக்கூடிய சொற்களைக் கொண்டு கவிதை எழுத வேண்டும்.
- எழுத்தைக் கொண்டு அசைகளை உருவாக்க வேண்டும். அசைகளைக் கொண்டு சீர்களை உருவாக்க வேண்டும் .சீர்களுக்கு இடையே தளைகள் உருவாகும் .
- தளைகளை அந்தந்த பாவிற்கு உரியபடி அமைத்தால் கவிதை சிறக்கும் .
- தளைகள் ஒன்று சேர்ந்தால் அடிகள் உருவாகும். அடிகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கினால் தொடைகள் தோன்றும்.
- சிறந்த தொடைகள் அமைந்தால் சிறந்த கவிதை உருவாகும்.
- தேமா ,புளிமா கொண்டு கவிதை எழுத வேண்டும். தவறினால் கவிதையில் தளைகள் தட்டும்.
- பூ மீது வண்டு தங்குவது போல, நல்ல கவிதைகள் நாட்டில் தங்கும்.
- சாமானிய மக்களுக்கும் புரியும் வண்ணம் கவிதை எழுதவேண்டும் என சுரதா குறிப்பிடுகிறார்.

**7.பண்டைக்கால கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.**

- பண்டைய காலத்தில் உபாத்தியாயருடைய வீடு பள்ளிக்கூடமாக இருந்தது. கணக்காயர் என்பது உபாத்தியாயர்கள் பெயர்.
- ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியில் திண்ணை இருக்கும். அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியதாகத் தோன்றுகிறது.
- பள்ளி என்னும் சொல் சைன மடங்களுக்கும் பாடசாலைக்கும் பொதுவான பெயர்.
- பெற்றோர்கள், குழந்தைகளை ஐந்து வயதில் ஆசிரியரிடம் ஒப்படைத்தனர்.
- பிள்ளைகள் பள்ளியில் சேரும் நாள் முக்கிய நாளாக கொண்டாடப் பட்டது.
- உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணவர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை முறை வைப்பது என்று கூறுவார்கள்.
- சுவடிகளில் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதற்கு வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு, மாவிலைக்கரி வகைகள் முதலியவற்றைக்

கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள். அதனால் சுவடி தெளிவாகத் தெரியும்.

- பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள்.
- எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் ,வரி கோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள்.
- எழுத்தின் வடிவம் பழங்காலம் தொட்டு இன்றும் அதே வழக்கத்தில் பெரிய மாறுபாடுகள் இல்லாமல் நடைமுறையில் உள்ளன.
- பண்டைக்காலத்தில் நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாக இருக்கும்.
- பண்டைக் காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை. ஆசிரியர்கள் மாணவர்களை அன்பினால் வழிப் படுத்தினார்கள்.
- கல்வியில் வாதம் செய்தல் நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் அன்று இருந்தது.
- பள்ளி பாடநூல்களையும் கடந்து வாழ்நாள் முழுவதும் படிக்கும் பழக்கம் அன்று முதல் இன்றுவரை இருந்து வருகிறது.
- ஆசிரியர்களைத் தேடி நாடி அவரிடம் கல்வி கற்றார்கள்.
- மாணவர்களுக்கு ஞாபக சக்தியைத் தூண்ட, தினமும் பூ, தினம் ,ஊர் இவற்றின் பெயர்களில் வகைக்கு ஒவ்வொன்றை ஆசிரியர் சொல்லி அனுப்புவார் . மாணவர்கள் அந்தப் பெயரை மறுநாள் மறவாமல்வந்து சொல்வார்கள்.

- இவ்வாறாக மாணவர்களின் அனைத்துத் திறமைகளையும் வளர்க்கும் விதமாகக் கற்றல் கற்பித்தல் பண்டைக் காலத்தில் இருந்து வந்தது.

8.நிருவாக மேலாண்மை குறித்து வெ .இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

நிருவாக மேலாண்மை:உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவராக இருப்பது சாத்தியமில்லை. ஆனால் , யார் திறமைசாலி என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக்கொண்டால் போதும் .
“தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் என தெரிந்திருப்பது மற்றொரு அறிவு” என்கிறது நாலடியார்.

நிர்வாகத்தில் வரவே செலவை தீர்மானிக்கவேண்டும். வரவைத்தாண்டி நிறைய செலவு செய்பவன் அடுத்தவரிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.

ஷேக்ஸ்பியர் நாடகத்தில் நிதி மேலாண்மை : டைமன் என்பவன் ஏதன்ஸ் நகரில் இருந்தான். அவனின் வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது . அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றி பேச வருகிற போதெல்லாம் கேட்க மறுத்தான் .ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனால், அப்போதும் அவன் வருந்தவில்லை.தான் அளித்த விருந்தை உண்டவர்கள், உதவுவார்கள் என்று பொய்க்கணக்கு போடுகிறான். அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் சென்று வெறும் கையோடும், வெளிறியமுகத்தோடும் திரும்புகிறார்கள். அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான். டைமன் பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் நிதி மேலாண்மை பற்றிய மிகச் சிறந்த வாழ்வியல் விளக்கம்.

அவ்வையாரின் நிருவாக மேலாண்மை : தான் ஈட்டும் பொருளை விட அதிகமாகச் செலவு செய்பவர்கள் ஒரு காலத்தில் தங்கள் மானத்தையும் அறிவையும் உணர்வையும் இழப்பார்கள். அவர்கள் எப்படி நடந்தாலும் திருடர்கள்போல நடத்தப்படுவார்கள். எத்துணைப் பிறப்பு பிறந்தாலும் எவ்வித மரியாதையும் கொடுக்கப்படாமல் தீயவர் போலவே நடத்தப்படுவர்.

## குறுவினா

**1.நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

கவிதையின் இயங்காற்றல் தான் நடை என்கிறது தொல்காப்பியம். மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமை மிக்க ஆற்றல் கவிதைக்காக இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதே நடையியல் எனப்படும்.

2. “படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக”- இச்சங்கக் கவிதையின்அடிகளில்ஓசை நயம் மிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக?

ஓசை நயம் மிக்க சொற்கள்: படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை கடாயானை நல்லிசை.
இலக்கணக்குறிப்புகள்:

- இசைநிறை அளபெடை/பண்புத்தொகை/செய்யுளிசை அளபெடை.

3) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
செந்நிறத்து வானம் போலத் தங்கள் கைகள் சிவந்திட உழைக்கும் தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம் அவர்களின் திரண்ட தோள் மீது முத்து முத்தாய் வீற்றிருக்கும் அழகினை வியந்து பாட செந்தமிழின் துணை வேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகின்றார்.

4) விடியல் வனப்பு இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க.
காலைக் கதிரவனின் விடியல் கண்ணுக்கு வனப்பை உண்டாக்கும்.

5. ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
இடம் : இப்பாடல் வரி தண்டியலங்காரம் உரை மேற்கோள் பாடலாகும்.
பொருள் : கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் புற இருளை அகற்றும்.
விளக்கம் : கடல் சூழ்ந்த இந்த உலகின் இருளை அகற்றும் கதிரவன், மக்களால் போற்றப்பட்டு உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி சான்றோரால் சொல்லப்படுகின்ற ஒன்றாகும்.

6.ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

- மனிதனுக்கு இயற்கை கொடுத்த வரம் மரம்.
- மரத்தை நாம் வாழ வைத்தால்; மரம் நம்மை வாழ வைக்கும்.
- ‘மரம் சா மருந்தும் கொள்ளார்’ நற்றிணை.
- மரம் வளர்ப்போம் !மழை பெறுவோம்!! மனிதநேயத்துடன் வாழ்வோம்!!!


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

**7.மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் இருதொடர்களாக்குக.**

- **மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.**
- **மனிதன் இயற்கை வளங்களைச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.**

**8.நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது விளக்கம் தருக.**

**மழைக்காலத்தில் நகரம் இருள் சூழ்ந்து காணப்பட்டது.சூரியனின் திடீர் பயணத்தால் இருள் விலகி வெளிச்சம் வந்தது.அந்த வெளிச்சத்தால் நகரம் பட்டை தீட்டிய வைரமாகக் காட்சி அளித்தது.**

**9)புக்கில், தன்மனை- சிறுகுறிப்பு எழுதுக.**

- **புக்கில் என்பது தற்காலிகத் தங்குமிடத்தைக் குறிப்பதாகும்.**
- **தன்மனை திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடமாகும்.**

**10.நிலையாமை குறித்து , சவரி உரைக்கும் கருத்து யாது?**

**நிலையாமை என்பது உலக வாழ்வு நிலையற்றது என்பதைக் குறிப்பதாகும்.பொய்யான உலகப்பற்று அழிந்தது ; அளவற்ற காலம் தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது ; என் பிறவி ஒழிந்தது என்று நிலையாமை பற்றிச் சவரி கூறினாள்.**

**11.எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப் படுத்துகிறார்?**

- **மனித வாழ்வில் ஒவ்வொரு காலையும் ஒரு புது வரவாக நடக்கும். எதிர்பாராத நிகழ்வுகளான ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம் , விழிப்புணர்வு போன்றவற்றையெல்லாம் உருவகப்படுத்துகிறார்.**
- **மேற்சொன்னவைகள் எல்லாம் நமது இல்லத்திற்கு வரும் எதிர்பாராத விருந்தாளிகளாக என்னவேண்டும் என்கிறார்.**


**தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909**

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

- எதிர்பாராத நிகழ்வுகள் எதிர்பாராத விருந்தாளிகளாக உருவகப் படுத்தப்பட்டுள்ளன.

12.கலிவிழா , ஒலிவிழா- விளக்கம் தருக.

கலிவிழா : எழுச்சி தரும் விழா (மயிலையில் கொண்டாடப்படும்)
ஒலிவிழா : ஆர வார விழா (கபாலீச்சரம் இறைவனுக்கு பூசை இடம் பங்குனிஉத்திர ஆர வார விழா)

13) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869இல் உருவாக்கப்பட்ட இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள், சுவடிகள்,புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

14) தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே தொடருக்குப் பதவுரை எழுதுக.

- தருமமிகு சென்னையில் - அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையில்.
- கந்த கோட்டத்துள் வளர் - கந்தகோட்டத்துத் திருக்கோவில்.
- தலமோங்கு கந்தவேளே - எழுந்தருளியிருக்கும் கந்தவேளே.

15 ) பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

முரண் : (எதிர்ச்சொல் ) பாடல் சொல்லாலும் பொருளாலும் வேறுபடுவது.
பெருங்கடல் × சிறுகுடிப்பரதவர்.

16) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூல் பற்றிக் குறிப்பு வரைக.

- அழகுக் கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல்.
- தமிழர்களின் கலைத் திறனை முழுமையாக எடுத்துக்காட்டும் நூல்.
- தமிழக அரசின் முதல் பரிசு பெற்ற நூல்.

17 )விரிபெரு தமிழர் மேன்மை ஓங்கிடச் செய்வதொன்றே உயிர்ப் பணியாகக்கொண்டோன் - யார், யாரைப் பற்றி , எதற்காகக் கூறுகிறார் ?

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வேங்கடசாமி பற்றி கூறுகிறார்.
தமிழ்ப் பணியைத் தம் உயிர்ப் பணியாக மேற்கொண்ட மயிலை .சீனி வேங்கடசாமியின் பணியைப் போற்ற இக்கவிதையைப் பாரதிதாசன் பாடினார்.

18) முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

எனக்குள்ளே என்னைத் தொலைத்த காரணத்தால் என் முகம் முகவரியற்றுப்போனது என்கிறார் சுகந்தி சுப்பிரமணியன்.

19 ) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர் ?

- இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லை
- வானம் இடிந்து விழவில்லையே
- கடல் நீர் வற்றிப் போகவில்லையே
- உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ ! என்று இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் புலம்பினர்.

20.பருவத்தே பயிர்செய் நேரமேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

சரியான நேரத்தில் விதைப்பதையே பருவத்தே பயிர் செய் என்று கூறுகிறோம்.

21.அறிவுடை வேந்தனின் நெறி குறித்து , பிசிராந்தையார் கூறுவன யாவை

- அறிவுடைய அரசன் வரிதிரட்டும் முறை அறிந்து, மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.
- அறிவில் குறைந்து, முறை தெரியாது வரிதிரட்டி னால் யானை புகுந்த நிலம்போல் அழிந்து விடும்.

22.செவியறிவுறூஉ துறையை விளக்குக.

செவியறிவுறூஉ துறை: அரசன் செய்யவேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல் , செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

**20) பொருள் கூறுக.**

**வெகுளி – சினம், புணை– தெப்பம் , ஏமம்– பாதுகாப்பு , திரு– செல்வம்**

**21.வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**

**மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**

***அறிவியல் மாணவர்கள் வரிசையில் நின்று கண்காட்சியைக் கண்டனர்.***

**22.திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கணவிதி யாது?**

- **திருவளர்செல்வன். வினைத்தொகையில் வல்லினம் மிகாது.**

**23.பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?**

**கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர் வாயு போன்றவை பசுமைக்குடில் வாயுக்கள் ஆகும்.**

## சிறு வினா

**1) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒருபண்பாகும்- விளக்குக .**

- **சங்கப்பாடல்களில்ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதனையே அந்தப் பனுவல் ஒலிப் பின்னல் என்கிறோம்.**
- **கடந்தடு தானை மூவிருங்கூடி**
  **உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;**
  **முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு; முந்நூறுஊரும் பரிசிலர் பெற்றனர்;**
  **என்னும் புறநானூற்று பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டும் க, த ,ட, ற என்ற வல்லின மெய்கள், மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வந்துள்ளன.**

**உயிரொலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும் ,சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரும் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் சங்கப் பாடல்களின் ஒலி கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்கியதை உணர்த்தும்.**


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

2.வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

- கோவலர்கள் இருந்த தாழ்வானப் பகுதியில் வெள்ளம் பெருகியதால் வெறுப்படைந்தனர்.
- தாங்கள் மேயவிட்டு இருந்த எருமை, பசு ,ஆடு ஆகிய நிரைகளை மேட்டு நிலங்களுக்கு மேயஓட்டிச் சென்றனர்.
- தாம் பழகிய நிலத்தை விட்டு வேறு இடத்துக்குச் சென்றதால் வருத்தமடைந்தனர்.
- மழையாலும் வாடைக்காற்றின் குளிர்ச்சியாலும் நடுங்கி இருந்த கோவலர்கள் உடலைக் கொள்ளி நெருப்பினால் சூடேற்றிக் கொண்டனர்.

3) மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக்குறிப்பிடுக.

- பெருமழையைத் தாங்கும் அளவிற்கு இயற்கை நமக்குப் பல அரண்களைத் தந்திருக்கின்றது .
- பெய்யும் மழை நீரை வீணடிக்காமல் மழை நீர்த் தொட்டி அமைக்க வேண்டும்.
- நீரின்றி அமையாது உலகு என்பதை மக்களுக்கு உரக்கச் சொல்ல வேண்டும்.
- கோடைக் காலங்களில் ஏரி ,குளம் ,குட்டைகளைத் தூர்வாருதல் வேண்டும்.
- புயல், சூறாவளி, வெள்ளம் குறித்து போதிய விழிப்புணர்வைப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும்.
- வெள்ள வடிகால் வசதியை மேற்கொள்ள வேண்டும்.

4) பேரிடர் மேலாண்மை ஆணையம் -விளக்கம் தருக .

- பேரிடர் மேலாண்மை ஆணையம் நடுவண் அரசால் 23.12.2005 இல் அமைக்கப்பட்டது.
- புயல், வெள்ளம், நிலநடுக்கம், சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி , பனிப்புயல், வேதிவிபத்துக்கள் முதலான பேரிடர்கள் நிகழும் போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
- மாநிலம் தொடங்கி சிற்றூராட்சி வரை அனைத்து நிலைகளிலும் இவ்வாணையம் செயல்பட வழிவகை செய்துள்ளது.

5) அறிவின் மேன்மை பற்றி திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?

- அறிவு ஆபத்திலிருந்து காக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்புக் கோட்டையாகும்.
- மனத்தை அது போகும் போக்கிற்குச் செல்ல விடாமல் , தீமையில் இருந்து விலக்கி நல்ல வழியில்செலுத்துவது அறிவு ஆகும்.
- எந்த ஒரு பொருளைப் பற்றி யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைப்பொருளைக் காண்பதே அறிவாகும்.

6.மூன்றான காலம் போல் ஒன்று அவை ஏன் விளக்குக.

- மூன்றான காலம் போல் ஒன்று என்பது எண்ணம், வெளியீடு, கேட்டல். மனத்தில் உள்ளது எண்ணம், அந்த எண்ணத்தை வெளியிடுவது வெளியீடு , வெளியிட்டதைக் கருத்து வேறுபாடின்றி கேட்பது கேட்டல்.
- மூன்று காலத்தையும் எப்படி ஒரே நேரத்தில் கூற முடியாதோ, அப்படிதான் இந்த மூன்றும் ஒன்றாக வருவதில்லை.

7) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

- அன்பு கலந்து அறிவு புகட்டுவேன்.
- ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும். அந்தத் திறமையை வெளிக் கொண்டு வருவேன்.
- கல்வி சுமையல்ல ; சுவை என்று உணர வைப்பேன்.
- காய்ச்சொல் தவிர்த்து, கனிச்சொல் மட்டுமே பயன்படுத்துவேன்.
- எதிர்மறை எண்ணங்களை விதைக்க மாட்டேன்.
- மாணவர்களிடம் வேறுபாடு பார்க்க மாட்டேன்.

8)மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

- முதலில் ஆசிரியர் தரையில் மணலில் எழுத, பிறகு மாணவர்கள் அதன் மேல் எழுதினார்கள்.

- அடுத்து சிலேட்டில் பலப்பம்(சிலேட்டுக் குச்சி )கொண்டு எழுதும் பழக்கம் உருவானது.
- கல், களிமண், பலகை, துணி, இலை, பனையோலை, மரப்பட்டை போன்றவற்றிலும் எழுதினார்கள்.
- இலை, மரப்பட்டை, களிமண், பலகை போன்றவை விரைவில் அழியக் கூடியவை.
- பிறகு கருங்கல்லில் எழுதினார்கள் கல்லில் எழுதியதை பிற இடங்களுக்கு எடுத்துச் செல்வது கடினமானது.

10 ) <u>சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.</u>

- சென்னை, பண்பாட்டு அடையாளங்களைத் தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருப்பவை.
- இந்திய சாரசெனிக் கட்டடக் கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டிடங்கள் சென்னையின் பழமையை இன்றும் நிலை நாட்டுகின்றன.
- எழும்பூர் அருங்காட்சியமும் கோட்டை அருங்காட்சியமும் அடையாளத்தைப் பறைசாற்றுகின்றன.
- இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னி மாரா நூலகம் நவீனமாகி வளர்ந்து வரும் பெரிய நூலகமாகும்.
- இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய சென்னைக்குத் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள் , திரையரங்கம் போன்றவை குறிப்பிடத்தக்க அடையாளங்களாக நமக்கு இன்றும் காட்சி அளிக்கின்றன.

11 ) இராமலிங்க அடிகளிடம் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார் ?

- கந்தவேளே ! எனக்கு ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும் .
- உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப்பற்றாதவாறு வழிகாட்ட வேண்டும் .

- மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்
- பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும் என்று இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் கேட்கிறார்.

**12)பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.**

- திருவிழா என்றாலே மக்களுக்கு கொண்டாட்டம் தான். இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளை உடைய பெரிய ஊர் திருமயிலை. அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும்.
- மயிலைக் கபாலீச்சரம் என்னும் கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறையாகாது என்கிறார் திருஞானசம்பந்தர்.

**13.நெல்லின் நேரே வெண்கல் உப்பு- இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்கு.**

ஒரு பொருளுக்கு மாற்றாக மற்றொரு பொருளைக் கொடுக்கும் வணிகமுறையே பண்டமாற்று.

பழங்காலத்தில் உப்பு சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக விளங்கியது.

இத்தொடர் கூறும் பொருள் உப்பின் அளவுக்கு நெல் தர வேண்டும்.

**14.நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- நாட்டிய அரங்கத்திற்கு நல்ல நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- நீண்டு வளர்ந்த மூங்கிலைக் கொண்டு அரங்கம் அமைக்கப்பட்டது
- அரங்கத்தின் நீளம், அகலம், உயரம், ஆகியவை சரியான அளவில் அமைக்கப்பட்டது.
- அரங்கின் உள்ளே செல்லவும், வெளியே வரவும் இரு வாயில்கள் அமைக்கப்பட்டன.

- ஐம்பூதங்கள் புகழும்படி சித்தரித்து அழகான நிலை விளக்குகளை நிறுத்தி உள்ளனர்.
- ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்று திரைச்சீலைகளில் வேறுபாடு உண்டாக்கிப் புதுமை படைத்தார்.

15.வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரை பலவற்றை எழுதுக.

- நிலத்தை நன்றாகப் பண்படுத்துதல்
- உரிய நேரத்தில் உரிய பயிரை விதைத்தல்
- நீர் மேலாண்மையை வலுப்படுத்துதல்
- அறுவடைக்கு முன்பும் பின்பும் பாதுகாத்தல்
- நல்ல விலை வரும் வரை இருப்பு வைத்தல்
- வேளாண்மையிலும் மேலாண்மையைக் கடைபிடித்தல்.

16)அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாகத் தமிழ்நதி கூறுகிறார்?

- ஆள் நடமாட்டம் இல்லாத நேரத்தில், யானையின் எச்சத்தில் இருந்து முளைத்திருக்கலாம் என்றும்.
- யாருடைய, கால் செருப்பின் பின்புறம் விதையாக ஒட்டிக் கிடந்து உயிர் உருவாகி இருக்கலாம் என்றும் , அதிசய மலரின் பூச்செடி முளைத்த விதம் குறித்து தமிழ்நதி கூறுகிறார்.

17.யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்கு.

உவமை : சிறு நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பலநாள் உணவாகும்.
நூறு மடங்கு பெரிய வயலாக இருந்தாலும் யானை தனித்துச் சென்று உண்டால் அதன் வாயில்போகும் உணவை விட காலில் மிதிபடும் நெல்லே அதிகமாகும்.
பொருள் : அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறையை அறிந்து, மக்களிடம் வரி திரட்டினால் நாடுகோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

அறிவில்லாத அரசன் முறை தெரியாமல் வரிதிரட்டினால் நாடு விரைவில் கெட்டுவிடும். அது யானை புகுந்த நிலம் போல் ஆகிவிடும்.

18.கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.

பேகன் : குளிரால் நடுங்கிய மயிலுக்கு ஆடையைக் கொடுத்தவன்.

பாரி : முல்லைக்கொடி பற்றிப் படரத் தேரினைத் தந்தவன்.

காரி : இரவலர்களுக்கு இல்லை என்று கூறாமல் கொடுப்பவன்

ஆய் : நீல நாகத்தின் உடையை ஆலின் கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன்.

அதியமான் : ஔவைக்கு நெல்லிக்கனியைக் கொடுத்தவன்.

நள்ளி : நட்புகொண்டார் உள்ளம் மகிழப் பொருளைக் கொடுப்பவன்.

ஓரி : மணம் வீசும் மலை நாட்டைக் கூத்தருக்குத் தந்தவன்.

20) ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழை என ஓர் மின் - இடம் சுட்டி பொருள் விளக்குக.

இடம் : எச்.ஏ.கிருட்டிணனார் எழுதிய இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலில் குமாரப் பருவத்தில் சரிதப்படலத்தில் இடம் பெற்றுள்ளது.

பொருள்: யூதர்களின் கொடும் செயலில் இருந்து விடுபட முடியாமல் ஓர் ஏழை போல அமைதியாய் இருந்தார். யூதர்கள் இறைமகனைக் கயிற்றால் கட்டும் போது அவர் உடன்பட்டு இருந்தார். தம் மீது பகைகொண்டு தனக்கு இழிவான செயல்களைச் செய்கின்ற போது அவர்கள் வாழுகின்ற காலத்தில் துன்பப்படாமல் வாழ வேண்டும் என்று இரக்கப்பட்டார் . அன்பு என்ற கட்டில் இருந்து விடுபடாமல், எந்த உதவியும் இல்லாமல் ஏழையாய் அமைதியாக நின்றார்.

## துணைப்பாடம்

**பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்டமொழிப்பற்று சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

" சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே " என்று பாடிய பாரதி , நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில்அதனை உறுதிப் படுத்துகின்றார்.

*மொழிப்பற்று:* தமிழ் தமிழ் என்று தமிழ் வளர்ப்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும் .அதே வேளையில் புதியசெய்தி, புதிய சிந்தனை, புதிய உண்மை, புதிய இன்பம் இவை அனைத்தையும் தமிழ் மொழியில்கொண்டு சேர்த்திடவேண்டும்.

தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் தோன்ற வேண்டும் . அந்தப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகளையெல்லாம் வளர்த்தெடுக்க வேண்டும் என்கிறார்.

*சமூகப்பற்று :* " ஆணுக்குப் பெண் அடிமை இல்லை" என்பதைச் சமூகம் உணர வேண்டும். ஆணும் பெண்ணும் ஓர்உயிரின் இரண்டு தலைகள் என்று எண்ண வேண்டும் . தலையில் ஒன்றுக்கொன்று தாழ்வு இல்லை என்று நினைக்க வேண்டும் . பெண்ணைத் தாழ்மை செய்தவன் தன் கண்ணையே குத்திக்கொண்டவனாவான்.பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தவன் என்கிறார்.

சமூகம் முன்னேற தொழில்கள் பெருக வேண்டும். வியாபாரம் வளர வேண்டும்.எந்திரங்கள் பெருகவேண்டும். முயற்சிகள் ஓங்க வேண்டும் . சங்கீதம், சிற்பம், எந்திர நூல், பூமி நூல் ,வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் தமிழ்நாட்டில் எங்கெங்கும் பரவிட வேண்டும் என்கிறார்.

அதற்குரிய ஆற்றலைத் தமிழ்ச் சமூகம் பெற வேண்டும் என்று பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாகத் தன் கருத்தினை வெளிப்படுத்துகிறார் பாரதியார்.

**பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.**

# முதல்கல் -உத்தமசோழன்

முன்னுரை: உயிர்களையும் பயிர்களையும் வாழவைப்பது மழை. அளவாகப் பெய்து பயிர்களைக் காக்கவும் செய்யும். பெருமழை பெய்து அழிக்கவும் செய்யும். பெருமழைக் காலங்களில் மழைநீர் தேங்காமல் வடிய செய்ய வழிவகை செய்வது மனிதனின் வேலை. அது ஒருவரால் முடியாது.
ஒன்று கூடி தான் செய்யவேண்டும். “உள்ளம் ஒன்று கூடினால் உள்ளங்கையில் வெற்றி வந்துசேரும்” என்பதை எடுத்துரைக்கிறது உத்தம சோழனின் முதல்கல் என்னும் இச்சிறுகதை.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் பெருமழை பெய்து வயலில் நட்டபயிர்கள் மூழ்கிக்கிடக்கிறன. தண்ணீர் வெளியே செல்வதற்கு வழி இல்லாத காரணத்தால்அழுகிவிடும் சூழ்நிலைஇருந்தது. இதைக் கண்டு மருதன் ஏங்கினான்.மழை நீரிலிருந்து பயிரையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு முயற்சி எடுத்தான். நீளவடிவாய்க்கால் முழுவதுமே நெய்வேலி காட்டாமணக்கு மண்டிக்கிடந்தது . இந்தப் பேய்ச்செடியைப்பிடுங்கி எறிந்தால் தான் நீர் வடியும் . பயிரையும் காப்பாற்ற முடியும்.

என்ன செய்வது என்றுயோசித்த வேளையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மாரிமுத்துவின் உதவியை நாடினான்.மாரிமுத்து இதெல்லாம் ஊரைக்கூட்டி செய்யக்கூடிய வேலை. நாம்மால் முடியாது , இந்த வேண்டாத வேலை உனக்கு எதுக்கு என்றான். அடுத்துக் குளக்கரை மேட்டில் புல்லறுத்துக் கொண்டிருந்த முல்லையம்மா கிழவியையும் மரத்தில்தழை ஒடித்துக்கொண்டிருந்த கிழவன் காளியப்பனையும் கண்டு, காட்டாமணக்குச் செடியை அகற்றுவதற்கு வீட்டிற்கு ஒரு ஆள் அரிவாள், மம்பட்டியுடன் வடிவாய்க்காலுக்கு வந்துடனும், ஒரு செடி, பூண்டு இல்லாமே அரிச்சு எரிஞ்சிட்டாபொட்டுத்தண்ணியில்லாம வடிந்து விடும் . இதை ஊர் மக்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்லுங்கள்அனைவரும் வருவார்கள் என்றான்மருதன் .

காளியப்பன் இந்த வேலையை நாம் செய்ய ஆரம்பித்தால்ஆயிரம் 2000 செலவாகும் என்று மனத்திற்குள் நினைத்து, நாளை என் மகளைப் பார்க்க நான்போறேன் என்னால் முடியாது என்றார். இதைக்கேட்ட மருதனுக்கு மனம் கசந்தது. அவ்வூரில் படித்த பட்டதாரியான பிரேம்குமாரைப் பார்த்து உதவி

கேட்டான்.அவன் நடிகருக்கு மன்றம் அமைக்கஅலைந்துகொண்டிருப்பதால் என்னால் முடியாது என்றான். இந்த மனவேதனையுடன் வீட்டிற்குச் சென்றான் .தன் மனைவி அல்லியிடம் இதைப்பற்றி சொல்லிவிட்டு, மனக்கசப்புடன் படுத்தான் .

விடியற் காலையில் மனைவி எழுந்து பார்த்தபோது மருதனைக் காணவில்லை.அவன் ஒருவனே வடி வாய்க்காலுக்குச்சென்று நெய்வேலி காட்டாமணக்கு செடியைச் சரக் சரக்கென அறுத்துக் கொண்டிருந்தான். அவன் மனைவியும் அவனுக்கு உதவியாக வாய்க்காலில் இறங்கி, ஊர் நல்லா இருந்தாதான் நாம நல்லா இருக்கலாம். நம்ம ரெண்டு பேராலா அறுக்கமுடியுமா மாமா என்று கேட்டாள்.

முதலில் நம்மால் முடிந்ததை நாம் செய்வோம் என்றான்.

அடுத்து மாரியும் மருதன், அல்லியோடு இணைந்து கொண்டான்.அப்போது அவ்வழியேவண்டியில் வந்த ஊர்ப் பெரியவர் காளியப்பன் வண்டியை விட்டு வாய்க்காலில் இறங்கினார்.இந்தச் செய்தி ஊர் முழுவதும் வெட்டிக் கதை பேசுபவர்காதில் விழுந்தது. உறுத்தல் தாங்காமல் ஒவ்வொருவராய் தயங்கி தயங்கி முன்னும் பின்னுமாய் வடிகால் நோக்கி நடக்கத்தொடங்கினார்கள்.

முடிவுரை:எந்த ஒரு காரியத்தையும் முதலில் ஒருவர் தான் செய்வார் . அந்த முதல் ஆள் யார்என்பதுதான் கேள்வி. ஒருவர் தொடங்கினால் அடுத்தடுத்து வந்து கொண்டே இருப்பார்கள். நல்லது செய்வதற்கு அந்த முதல் ஆளாக நாம் இருப்போம்.

## சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை ?

முன்னுரை: வாழ்வை முழுமையாக்கும் கூறுகளுள் முதன்மையானது பயணம்.அதிலும் சாலைவழிப் பயணம் மனத்திற்கு இன்பத்தை அளிக்கக் கூடியது.அத்தகைய பயணத்தை அனைவரும் பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும்.

மனித வாழ்வு பயணங்களால் நிறைந்தது. அன்றாட வாழ்வில் சாலைகளில்தான் நாம் அதிகமாகப் பயணம்செய்கிறோம். சாலையில் பாதுகாப்பாகப்பயணம் செய்வதற்கு விதிமுறைகள் உள்ளன.சாலைப் பாதுகாப்பு என்றால் சாலையை நன்றாகப் பாதுகாப்பது என்பது பொருளல்ல.சாலையில் நாம் பாதுகாப்புடன் பயணம் செய்வது என்பது பொருள்.

நம் நாடுதான் உலகிலேயே அதிகசாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு. ஏறக்குறைய 55 இலட்சம் கி.மீ. சாலைகள் நம் நாட்டில்உள்ளன. அதுபோன்று 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் உள்ளன. அதனால், விபத்துகள் மிகுதியாக நடக்கின்றன.

சாலை விபத்தால் சுமார் 2 இலட்சம் பேர் தங்கள் உடலுறுப்புகளை இழந்து துன்பத்தில் வாடுகின்றனர். நாளொன்றுக்கு நேரும் விபத்துகளில் மூன்றில் ஒரு பங்கினர் உயிரிழக்கின்றனர். குறிப்பாகத் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே மிகுந்தசாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாகஇருக்கிறது.

இந்தியாவில் ஏற்படும் சாலைவிபத்துகளில் 15 விழுக்காடு விபத்துகள் தமிழ்நாட்டில் நடப்பது வேதனைக்குரியது.தமிழ்நாட்டில் நடைபெறும் மொத்த விபத்துகளில் 35 விழுக்காடு இருசக்கர ஊர்திகளால் ஏற்படும் விபத்துகளாக உள்ளன.

விபத்து தடுக்கும் வழி :

பதினெட்டு வயது நிறைந்தவர்கள் மட்டுமே முறையான பயிற்சியின் மூலம் ஓட்டுநர் உரிமம் பெற்று , இருசக்கர ஊர்தியை இயக்கவேண்டும். பள்ளி மாணவர்கள் இருசக்கரவாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும் சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. பள்ளி மாணவரகளிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பதுகுறித்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

விபத்து ஏற்படக் காரணம்:

இருசக்கர வாகனத்தில் தலைகவசம் அணியாமல் செல்வது , இரண்டு பேருக்கும் மேற்பட்டோர் பயணிப்பது, கைபேசியில் பேசிக் கொண்டே செல்வது , சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்குவது, போட்டி , பந்தயம் எனச்சொல்லிப் பொதுவழியில் உச்ச வேகத்தில் ஓட்டுவது, காதணிகேட்பிகள் பொருத்திக்கொண்டு ஊர்திகளை ஓட்டுவது எனப் பலகாரணங்களால் இருசக்கரவாகன விபத்துகள் பெருமளவில் நடக்கின்றன. இத்தகைய ஒழுங்கீனச் செயல்களைத் தவிர்த்தால் விபத்துகள் ஏற்படா.

சாலை விதிகள் குறித்தவிழிப்புணர்வு இல்லாததுதான் விபத்துகள் ஏற்படக் காரணங்களாக அமைகின்றன.இன்றைய நவீன உலகில் 'அவசரம்' என்கிற நோய் எல்லோரையும் பீடித்திருக்கிறது . வாகன ஓட்டுநரின் கவனக் குறைவு , போதிய

பயிற்சியின்மை, தட்பவெப்ப நிலை, இயந்திரக் கோளறு , மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ ஏற்றிச்செல்வது , தொடர் வண்டி இருப்புப் பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது போன்ற பல காரணங்களால் விபத்துகள் மிகுதியாக நடக்கின்றன.

மதுகுடித்துவிட்டு ஊர்தி ஓட்டுவதால் நிறையவே விபத்துகள் நடக்கின்றன. இவைதான் பெரும்பாலான விபத்துகளுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. மாணவரகள் சிலர் சாலைகளில் விளையாடுவது , கவனிக்காமல் திடீரென்று சாலையைக் கடப்பது , சாலையின் நடுவே செல்வது , சாலையை அடைத்துக் கொண்டுசெல்வது , வேகமாகச் செல்லும் வாகனத்தின் பின் புறத்தைப் பிடித்துக் கொண்டு மிதிவண்டியில் செல்வது , ஓடும் பேருந்தில்ஏறுவது இறங்குவது , பேருந்தின் படிக்கட்டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர் . இதனால் மாணவர்கள் தங்கள் உயிரையும் உடலுறுப்புகளையும் இழக்க நேரிடுகின்றனர்.

முடிவுரை: சாலை விதிகளைத் தெரிந்துகொள்வதும் பிறருக்குச் சொல்வதும் விழிப்புணர்வு கொள்வதும் ஒருவகைக் கல்விதான். இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் செயல்பட்டால் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடியும். விபத்தில்லாத தமிழ்நாடு உருவாகும்.

## கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

‘இந்தியாவின் முதுகெலும்பே கிராமங்கள்’ தான் என்றார் காந்தி. ஆனால், கிராமங்கள் இன்று தங்கள் முகத்தை இழந்து விட்டது. விவசாயம் பொய்த்து விட்டது. நகரத்தை நோக்கி மக்கள் நகர்ந்து வருகிறார்கள்.

விவசாய நாடான இந்தியாவில் விவசாயம் இன்று கேள்விக்குறியாகி விட்டது. பிழைப்பிற்காக மக்கள் தங்கள் இடத்தை விட்டு வெளியூர்களுக்கு, வெளி மாநிலங்களுக்கு, வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். வேலைக்காக ஆண்கள் மட்டும் சென்ற நிலை மாறி இன்று பெண்களும் செல்கின்றனர்.

அரசு விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விவசாயம் என்பது அவமானம் அல்ல அதுதான் நம் அடையாளம் என்று மக்கள் எண்ண வேண்டும். பள்ளி, கல்லூரி ,மருத்துவமனை, தொழிற்சாலை என அனைத்தும் கிராமத்தில் இருக்க வேண்டும். கட்டமைப்பு வசதிகள் உள்ள கிராமமாக அனைத்து கிராமமும் உருவாக வேண்டும் . குடிநீர் வசதி, மின்சார வசதி, சாலைவசதி போன்ற அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்குச் செய்து தருவது அரசின் கடமையாகும்.

இது போன்ற வசதிகளை எல்லாம் கிராமங்களுக்குச் செய்து கொடுத்தால்தான் கிராமங்கள் தங்கள் முகவரியை இழக்காமல் பொலிவுடன் விளங்கும் .மக்களும் தான் பிறந்த மண்ணை நேசிப்பார்கள்.

## கோடை மழை

**கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.**

கதைமாந்தர்கள்: முதியவர் ஆறுமுகம் / குழந்தை / மருந்து ஊழியர் பாபு.

முன்னுரை: கோடை மழை என்னும் இச்சிறுகதையின் ஆசிரியர் சாந்தா தத். தாய் தந்தை இல்லாத ஏதிலிக் குழந்தைகளின் நிலை மிகக் கொடியது. அக்குழந்தைகளை ஏற்று வளர்க்கும் மனித பண்பு மாண்புக்குரியது. அதைக் கோடை மழை கதையின் வாயிலாக நாம் காணலாம்.

ஆறுமுகத்தின் அன்பு : விழிகளை அகல விரித்து எவ்வித இலக்குமின்றி இப்படியும் அப்படியுமாய்ப் பார்வையைச் சுழற்றிக்கொண்டிருந்த,காய்ச்சலால் அவதிப்படும் குழந்தையை நினைத்து அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார் ஆறுமுகம். கூட்டம் அதிகம் வருவதற்கு முன்பே இடம் பிடித்து வரிசையில் நிற்க வேண்டும்.
அரசு மருத்துவ மனையில் வரிசை ஆமை வேகத்தில் நகர்ந்தது ,இரண்டு நாள் காய்ச்சலால் அவதிப்படுகின்ற தன் பேரப் பிள்ளையைக் கையில் கடுப்பு(வலி ) ஏற்படும் வரை மருத்துவமனை வரிசையில் ஏந்தி நிற்கிறார் பெரியவர்.


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

மருமகள் இறந்துவிட அவளின் பிரிவுதாங்காமல் மகனும் விஷம் அருந்தி உயிர் விட்டுவிட்டான் .தந்தையையும் பிள்ளையையும் காக்கும் கடமை இருந்தும் மனைவி மீதுள்ள அன்பினால் தன்மகன் இறந்து விட்டான்.

தன்னலமற்ற தலைவர்: மகன் இறந்த பின், பேரப் பிள்ளையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்புடன் ஆறுமுகம் இருந்தார்.மகனுக்காக வாழ்ந்த ஆறுமுகம் இப்பொழுது தன் பேரக் குழந்தைக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.கூட்டம் கொஞ்சம் குறைந்ததும் மருத்துவரைப் பார்த்தார் ஆறுமுகம். தன் பேரக் குழந்தைக்கு நெஞ்சில் சளி இருப்பதாகவும் மருந்து போட்டால் சரியாகிவிடும் என்றும் மருந்து சீட்டு எழுதிக்கொடுத்தார் மருத்துவர். சீட்டை வாங்கிக் கொண்டு குழந்தைக்கு மருந்து வாங்க மருந்தகம் சென்றார் ஆறுமுகம்.

மருந்தகத்தில் உள்ள பாபுவிடம் தன் நெஞ்சில் உள்ளதைச் சொன்னார். இந்தக் குழந்தைக்காக நான் அதிக நாள் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் என்றார். குழந்தையில்லாத பெற்றோர் ஒருவர் குழந்தை வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த போது, பாபு ஆறுமுகத்திடம் உங்கள் பேரக் குழந்தையை அவர்களிடம் தத்து கொடுத்து விடலாம் என்று சொன்னார்.குழந்தை இல்லாத தம்பதிகள் வந்தார்கள். ஆறுமுகம் தன் பேரக் குழந்தையை அவர்களிடம் கொடுத்துவிட்டார்.

பிள்ளைப் பாக்கியம், ஏக்கம், தவிப்பு, எதிர்பார்ப்பு அத்தனையும் அவர் முகங்களில் உணர்ந்தபோது பிள்ளையின் பாதுகாப்பு குறித்து ஆறுமுகத்துக்கு நம்பிக்கை வந்தது .உங்களுக்குக் கவலை வேண்டாம் ஐயா, நாங்கள் குழந்தையை நன்றாகப் பார்த்துக் கொள்வோம். நீங்கள் விருப்பப்பட்டால் குழந்தையைப் பிரிந்து சிரமப்படாமல் நீங்களும் எங்களோடு வந்து விடுங்கள் ஐயா, எங்க மூணு பேருக்குமே ஒரு பெரிய துணையா, பலமாய் இருக்கும். நீங்க எதுக்கும் தயங்காதீர்கள்.

நாம ஒருத்தருக்கு ஒருத்தர் முடிந்த அளவில் உதவியாக இருப்போம். சரின்னு சொல்லுங்க ஐயா, என்றார்கள். இதைக் கேட்டு அதிர்ந்து போன ஆறுமுகம். யாருக்கு யார் உதவி? எவ்வளவு பெரிய விஷயம்? இவ்வளவு எளிமையாய்... தனக்கு எந்தச் சங்கடமும் கூடாதென மிகவும் பக்குவமாய் இவன் ....மலை போன்ற அத்தனை பிரச்சினைகளுக்கும் எப்படி, இப்படி ஒரே நாளில் தீர்வு கண்டு குழந்தையுடன் தன்னையும் சுவீகரித்து. பாபு இப்போதைக்கு எனக்குச் சாவு வராது,வந்த கண்ணீரை இப்போது சுதந்திரமாக வெளியே நீட்டியபடி கைகூப்பினார் முதியவர் ஆறுமுகம்.

## மனப்பாடப் பகுதி

### 1.தண்டியலங்காரம்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்- ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்! - தண்டி

### 2.நெடுநல்வாடை- நக்கீரர்

‘வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க.
- நேரிசை ஆசிரியப்பா

**கம்பராமாயணம்- கம்பர்**

'துன்பு உளது எனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல் ;
முன்பு உளம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள ,இனி ,நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம். கலிவிருத்தம்.

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

இதில் வெற்றி பெற- சுரதா

விண் வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

## புறநானூறு- ஔவையார்

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும் ,அத்திசைச் சோறே. - நேரிசை ஆசிரியப்பா

## தெய்வமணிமாலை- இராமலிங்க அடிகள்

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்.
-பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பாவகை

## சிலப்பதிகாரம் -இளங்கோவடிகள்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடிநின்று இசைத்தது ஆமந் திரிகை
பாவகை : ஆசிரியப்பா


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

## புறநானூறு- பிசிராந்தையார்

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும் ,பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

## இரட்சணிய யாத்திரிகம்- எச். ஏ. கிருட்டிணனார்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

## சிறுபாணாற்றுப்படை -நத்தத்தனார்

எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்

## திருக்குறள்-இயல்-3

1.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
2.வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.
3.செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.
4.நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

5.எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
6.அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.
7.மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.
8.தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.
9.சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்
10.நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

## திருக்குறள்/ இயல்-6

1.அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

2.எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு .(சொற்பொருள் பின்வரு நிலையணி)

3.எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

4.நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

5. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

6.சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

7.உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

8.கடன் அறிந்து காலங் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

9.வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.
10.பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின் .

- உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
  பாம்போடு உடனுறைந் தற்று.(உவமை அணி)
- அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
  இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார். (தொழில் உவமையணி)
- எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
  திண்ணியர் ஆகப் பெறின். (சொற்பொருள் பின்வரும் நிலையணி.)

**கீழடி**
**நம்**
**தாய்மடி...**


தமிழினிராமகிருஷ்ணன்.அரசு மாதிரிப்பள்ளி,அரியலூர்-9962264909